# தமிழ்த் தேசியத்
# தமிழர் கண்ணோட்டம்

10 - 6 திருவள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி ஏப்பிரல் 1 - 15 2017 ரூ. 15/-




## காவிரித்தாய்க் காப்பு
## தொடர் முற்றுகை



**கம்பெனிமயமாகும் கட்சிகள்**
நிதிச்சட்டம் திருத்தப்படுகிறது 10



**தீர்ப்பு தீர்வாகாதாம்**
காவிரித்தீர்ப்பை காலி செய்ய
புதிய சட்ட மசோதா 14



**உழவர்களின் தற்சார்பு அழிக்கப்பட்ட அறுபதாண்டுகள்**
இயற்கைவேளாண் வல்லுநர்
**பாமயன்** செவ்வி 21

# “செண்பகவல்லி தடுப்பணையை சீரமைக்கவும் தமிழ்நாடு-கேரள எல்லையை ஒழுங்கு செய்யவும் தமிழ்நாடு முதலமைச்சர் கேரளத்தோடு பேச வேண்டும்!”

**கி. வெங்கட்ராமன்**

செண்பகவல்லி அணை திருநெல்வேலி மாவட்டம் - வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் மற்றும் இராச பாளையம் வரையிலான கிராமங்களுக்கு வேளாண்மை மற்றும் குடிநீருக்கானப் பயன்பாட்டுக்காக கட்டப் பட்டது. வாசுதேவநல்லூர் பகுதியில் மட்டும் 15 குளங்களும், சிவகிரி பகுதியில் 33 குளங்களும், சங்கரன்கோவில் வட்டத்தில் நேரடி பாசனத்தின் வழியாகவும் சற்றொப்ப 11,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசன நீரையும், குடிநீரையும் இந்த அணை வழங்கி வருகிறது.

1956ஆம் ஆண்டு மொழிவழி மாநிலம் உருவாக்கப் பட்டதற்குப் பிறகு, 1963இல் செண்பகவல்லி தடுப் பணை உடைந்த போது, அன்றைக்கு இருந்த காமராசர் ஆட்சி தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூலம் உடனடியாக செண்பகவல்லி அணையை சீர் செய்தது.

ஆனால், மொழிவழி மாநில எல்லை வரையறுக்கப் பட்ட பிறகு, தமிழ்நாட்டிற்கும் கேரளாவுக்கும் இடை யிலுள்ள எல்லை சரிவர ஒழுங்கு செய்யப்படாமல் இருந்ததால், கேரள அரசும் அதன் வனத்துறையும் தமிழ்நாட்டு எல்லைக்குள் ஒவ்வொரு நாளும் ஆக்கிரமித்து தனது ஆட்சிப் பகுதியை விரிவாக்கி வருகின்றன.

அதன் விளைவாகத்தான், மீண்டும் 1984இல் செண்பகவல்லி அணையில் உடைப்பு ஏற்பட்ட போது, அன்றைக்கு இருந்த எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் இதே அணை கேரள அரசுக்கு சொந்தமானது என்று வாதிடப்பட்டது. தமிழ்நாடு அரசு, இந்த அணை தமிழ்நாட்டு எல்லைக்குள் இருக்கிறது என்று நிலைநாட்டாமல், கேரளப் பொதுப்பணித் துறையிடம் பேசி - அணையை சீரமைக்க 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் சீரமைப்புச் செலவு என முடிவு செய்து, அதில் பாதித்தொகையான 5 இட்சத்து 15 ஆயிரத்தை முன்தொகையாக கேரள அரசுக்கு அளித்தது.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு கேரள அரசு, அப்பணத்தைத் திருப்பி அனுப்பி, சீரமைக்க முடியாது என்று அறிவித்ததன் காரணமாக, சிவகிரி வட்ட விவசாயிகள் சங்கத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அதில் 2006இல் (03.08.2006) தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், தமிழ்நாடு அரசு கேரள அரசுக்கு நிதி வழங்கி அணையை 8 வாரத்திற்குள் சீரமைக்க ஆணையிட்டது.

**தொடர்ச்சி 35 ஆம் பக்கம்...**



# தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

ஆசிரியர் - வெளியீட்டாளர்

**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர்

**கி.வெங்கட்ராமன்**

ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

**கவிபாஸ்கர், க. அருணபாரதி, நா. வைகறை, அ. ஆனந்தன், பொன்னுசாமி, க. காந்திமதி, நா. இராசாரகுநாதன், ப. செம்பரிதி, கதிர்நிலவன்**

வடிவமைப்பு

**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு

**தமிழ்த் தேசிய வரைகலை,**

**சென்னை - 17.**

அச்சாக்கம்

**பிரின்ட் பாஸ்ட்,**

**வேளச்சேரி, சென்னை - 42.**

**தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்**

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை -600 078.
தொலைப்பேசி : 044-24742911

மின்னஞ்சல்: tkannotam@gmail.com
tamizhdesiyam@gmail.com
இணையம்
http://tamizharkannotam.blogspot.com
http://www.kannotam.com

❖

**தமிழ்த்தேசியப் பேரியக்கம்**
இணையம்
http://tamizhdesiyam.com

❖

கீற்று இணையதளத்திலும் படிக்கலாம்
www.keetru.com

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ 15 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 350 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ 1000 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ 1600 |
| பத்தாண்டுக் கட்டணம் | ரூ 3000 |




**10**

**கம்பெனிமயமாகும் கட்சிகள் நிதிச்சட்டம் திருத்தப்படுகிறது!**
கி. வெங்கட்ராமன்


தஞ்சையில் காவிரித்தாய் காப்பு
*தொடர் முற்றுகை அறப்போராட்டம்*........ 6

தென்பெண்ணையைத்திருப்பி விடும்
கர்நாடக அரசின் திட்டத்தை இந்திய அரசு
தடுத்து நிறுத்த வேண்டும்
*த.தே.பேரியக்கம் வலியுறுத்தல்*........ 13

தீர்ப்பு தீர்வாகாதாம் காவிரித் தீர்ப்பை
காலி செய்ய புதிய சட்டமசோதா
*- பெ. மணியரசன்*........14

போக்குவரத்துக் கழகங்களை புறக்கணிக்கும் தமிழ்நாடு அரசு
*நா. வைகறை*........16

பசுமைத் தீர்ப்பாயத் தடையை மீறி நியூட்ரினோ
ஆய்வகத்தை தமிழகத்தில்தான் அமைப்போம்
இந்திய அரசின் இனவெறிப் பிடிவாதம்
*- கி.வெ.*........18

உழவர்களின் தற்சார்பு அழிக்கப்பட்ட அறுபதாண்டுகள்
*இயற்கைவேளாண் வல்லுநர் பாமயன் செவ்வி*........21

கோடிக்கணக்கானவர்களை வீதிக்கு விரட்டும் தானியங்கி மயம்
- க. அருணபாரதி........26

வரலாறு அறிவோம் : நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்
- கதிர் நிலவன்........28

இடதுசாரிகள் இசங்களில் கட்டுண்டு நிற்காமல்
மண்ணின் மக்கள் உரிமைக்காக நிற்க வேண்டும்
தோழர் கி.வெ.பேச்சு........ 32

ஊர் உலகம்........34



உறுப்புக்கட்டணங்கள் (சந்தா), த.க. விற்பனைத் தொகை
ஆகியவற்றைக் கீழ்க்காணும் வங்கி முகவரியில் செலுத்தலாம்
**தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை,**
**இந்தியன் வங்கி,** தி.நகர், தெற்கு உஸ்மான் சாலை -கிளை
**சேமிப்புக் கணக்கு எண்: 6126971024**
IFSC CODE: IDIB000T115

ஆசிரியவுரை

தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

ஏப்பிரல் 1 - 15, 2017

# நிலவுகின்ற அரசியல் குழப்பம் தெளிவிற்கான முதல் நிலையே!

செயலலிதா மறைவு, கலைஞர் கருணாநிதியின் செயலற்ற முதுமை ஆகியவை தமிழ்நாட்டில் செல்வாக்குமிக்க அரசியல் தலைமைகள் இல்லாத ஒரு வெற்றிடத்தை அல்லது ஒரு குழப்பச் சூழலை உருவாக்கியுள்ளன; அ.இ.அ.தி.மு.க. பதவிச் சண்டையில் பலவீனப்பட்டுக் கிடக்கிறது. தி.மு.க.வின் அரண்மனைக் குடும்பத்தின் வாரிசுரிமைப் போராட்டம், இடைக்கால ஓய்வில் இருந்தாலும், எப்போது வெடிக்குமோ என்ற எதிர்பார்ப்புள்ளது.

இவ்வாறான, திடமற்ற, அமைப்பு இறுக்கமற்ற, தமிழ்நாட்டு அரசியல் சூழல், இந்திய ஆட்சியில் உள்ள ஆரியவாத பா.ச.க.வின் ஊடுருவலுக்கும், வளர்ச்சிக்கும் வழி வகுத்து விடுமோ என்ற அச்சம் தமிழ்த்தேசிய மற்றும் பொறுப்புள்ள சிந்தனை யாளர்களிடம் இருக்கிறது. பா.ச.க.வின் அபாயத்தைத் தடுப்பதற்காக ஒரு சாரார், சசிகலா அணி அல்லது பன்னீர்ச்செல்வம் அணியை ஆதரிக்கின்றனர்; இன்னொரு சாரார் தி.மு.க.வை ஆதரிக்கின்றனர். இவ்வாறு செய்வது சரியான உத்தியும் அன்று; அரசியல் வியூகமும் அன்று!

அ.இ.அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகளின் செல்வாக்கு மிக்கத் தலைமைகள் ஒரே நேரத்தில் இல்லாமல் போன சூழலில், இடைக்காலத்தில் அரசியல் நிலையற்ற தன்மையும் குழப்பங்களும் ஏற்படத்தான் செய்யும். உடனடியாக இதை மாற்றீடு செய்ய முடியாது. வடநாட்டு ஏகாதிபத்தியவாதக் கட்சிகளான பா.ச.க.வும் காங்கிரசும் தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் குழப்ப நிலையைப் பயன்படுத்தி இங்கு ஆக்கிரமிப்புச் செல்வாக்கு பெற பலவழிகளில் செயல்படும்.

தமிழ்நாட்டு உரிமைகளை முன்னிறுத்தியும் “தமிழன்டா” என்ற முழக்கத்தை முன்வைத்தும் களம் இறங்கியுள்ள தமிழ் இளைஞர்களின் எழுச்சியானது, உடனடியாக ஒரு மாற்று அரசியல் தலைமையை உண்டாக்கி விடாது; சிறிது காலம் பிடிக்கும்! புது வெள்ளம் கசடுகளையும் கரைத்துக் கொண்டு கலங்கலாகத்தான் ஓடிவரும்! அது தெளிவதற்கு சிறிது காலம் தேவை! இப்பொழுது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள், புதிய தெளிவு உருவாகும் முன் ஏற்பட்டுள்ள கலங்கல் என்று உணர வேண்டும். இந்த அரசியல் குழப்பம் தமிழர் உரிமை அரசியலில் ஒரு வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கிறது என்ற உண்மையைக் கவனிக்க வேண்டும்.

செயலலிதாவும் கருணாநிதியும் இன்றும் தீவிர அரசியல் செயல்பாட்டில் நீடித்தால், அது தமிழ்நாட்டுக்கு நன்மையா? தமிழ்மொழியின், தமிழ் மக்களின் உரிமைக் காப்பிற்கும், சனநாயகத்திற்கும், தமிழர் அறத்திற்கும் அது பயன் தருமா என்பதையும் சிந்திக்க வேண்டும். இன்றையத் தமிழக அரசியல் மற்றும் சமூகவியல் சீரழிவிற்கான முதற்பெரும் காரணிகளாகச் செயல்பட்டவர்கள் கருணாநிதியும் செயலலிதாவும்!

ஒருவரின் மறைவினாலும் இன்னொருவரின் இயலாமையாலும் இயற்கையாக அவர்களின் தலைமை முடிவுக்கு வந்திருக்கிறது. தனித்தலைவர் வழிபாட்டு அரசியலும், உயர் இலட்சியங்களற்ற தலைவர் விசுவாச அரசியலும் தொற்று நோய் போல் பரவிவிட்ட ஒரு சமூகத்தில், அதற்குக் காரணமான தலைவர்களின் இடம் காலியாகும்போது, இடைவெளி இல்லாமல் – இடைக் குழப்பமில்லாமல் இன்னொரு புதுத் தலைமை வந்துவிடாது! ஏனெனில், புதிய தலைமையால் இவர்களின் தலைமை மாற்றப்படவில்லை!

எனவே இப்பொழுது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் புதிய வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் வாய்ப்பளிப்பது என்ற உண்மையைப் பார்க்க வேண்டும். மக்கள் செல்வாக்குமிக்க மாபெரும் தலைவர்களாக கருணாநிதி, எம்.ஜி.ஆர்., செயலலிதா ஆகியோர் ஆட்சி செய்த காலங்களில்தான் காவிரி, கச்சத்தீவு, முல்லைப்பெரியாறு, பாலாறு போன்றவற்றின் உரிமைகளை இழந்தோம்! தமிழ்மொழியின் அதிகாரத்தை ஆட்சியிலும் கல்வியிலும் இழந்தோம். இந்தித் திணிப்பும், சமற்கிருதத் திணிப்பும் தீவிரப்பட்டன! புதுப்புது வடிவங்களில் – இந்தியப்பேராதிக்கமும் பார்ப்பனியமும், தமிழ்நாட்டில் புதுப்புதுக் கிளைகள் விட்டன!

தமிழ்நாட்டின் – தமிழர்களின் உரிமை மற்றும் வளர்ச்சிகளில் உண்மையான அக்கறை கொண்ட தமிழ்த்தேசியச் சிந்தனையாளர்கள் மற்றும் சமூகப் பொறுப்புள்ளவர்கள் இலட்சிய வழிப்பட்ட புதிய அரசியலும் அதற்கான கூட்டுத் தலைமையும் செல்வாக்குப் பெற்று வளர பங்களிக்க வேண்டும்.

இன்று பா.ச.க. அபாயம் மட்டும் மேலோங்கவில்லை. அதற்கெதிரான தமிழ்த்தேசிய எத்தணிப்புகளும் எழுந்து வருகின்றன. இதில் நம்பிக்கை கொண்டு இலட்சிய அரசியலை முன் கொண்டு செல்ல வேண்டும். மாறாக பா.ச.க. அபாயத்தைக் காட்டி, அ.இ.அ.தி.மு.க. அல்லது தி.மு.க.வை ஆதரித்தால், களத்தில் இல்லாத செயலலிதாவின் விசுவாசிகளாகவும், கருணாநிதியின் விசுவாசிகளாகவும் மட்டுமே இவர்கள் வரலாற்றுப் பதிவேட்டில் இடம் பெறுவார்கள். நிலவும் சீரழிவு அரசியலை நிலைப்படுத்த முயல்பவர்களாகவும் அறியப்படுவார்கள்.

## அடிப்படை உரிமையை மறுக்கும் தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு தற்போது போர்க்களமாக மாறியுள்ளது. போராட்டங்கள் நடைபெறாத பகுதியே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு, ஊருக்கு ஊர் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியுள்ளன. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மறுத்ததால் ஏற்பட்ட செயற்கை வறட்சியின் காரணமாக இதுவரை 250க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டு உழவர்கள் இறந்துள்ளனர். அவர்களுக்கு வறட்சி நிவாரணம் வேண்டுமென போராட்டங்கள் வெடித்த நிலையில், நாம் கேட்ட 40,000 கோடி ரூபாய்க்குப் பதிலாக, அதில் பத்தில் ஒரு பகுதிகூட அளிக்காமல் வெறும் 1741 கோடி ரூபாயை அளித்து, தமிழ்நாட்டை வஞ்சித்துள்ளது இந்திய அரசு! இதை எதிர்த்து தில்லியில் கடும் குளிரையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் 15 நாட்களுக்கு மேல் போராடி வரும் தமிழ்நாட்டு உழவர்களை நேரில் சந்திக்கக்கூட மறுக்கிறார் இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோடி!

இதனைத் தொடர்ந்து, நெடுவாசல் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, அப்பகுதியில் ஐட்ரோகார்பன் எடுக்க தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது இந்திய அரசு! பசுமைத் தீர்ப்பாயம் தடை விதித்த நிலையில், கதிர்வீச்சு அபாயமிக்க நியூட்ரினோ ஆய்வகத்தைத் தமிழ்நாட்டில்தான் திறப்போம் – வேறு இடத்திற்கு மாற்றும் பேச்சுக்கே இடமில்லை என்றிருக்கிறது இந்திய அரசு!

இப்படி நாளுக்குநாள் தமிழ்நாட்டின் மீது தொடுக்கப்படும் தாக்குதல் காரணமாக தமிழ்நாட்டில் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியுள்ளன. தஞ்சையில் காவிரி உரிமை மீட்புக் குழுவினர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு அறப்போராட்டம் நடத்தி வருகின்றனர். சென்னையில் தைப்புரட்சி நடைபெற்ற அதே மெரினா கடற்கரையில், யாரும் எதிர்பாராத வகையில் திடீரென கடலுக்குள் சென்று மாணவர்களும் இளைஞர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து – அலைகடலுக்குள் நின்று கொண்டு, நம் உழவர்களுக்காகக் குரல் கொடுக்கின்றனர். இப்படி, மதுரையில், கோவையில், நெல்லையில் என மாணவர்களும் இளைஞர்களும் ஆங்காங்கு தன்னெழுச்சிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இப்படி தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடத்துவோர் மீது, தமிழ்நாடு அரசு கடும் அடக்குமுறையை ஏவி வருகின்றது. தஞ்சை காவிரி உரிமை மீட்புக் குழுவின் அறப்போராட்டத்தை, முதல் நாளிலிருந்தே காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும் நெருக்கடி கொடுத்து, கலைந்து போக வேண்டுமென்று "ஆணையிடுகின்றனர்". "எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இதுவரை என்ன செய்துள்ளது தமிழ்நாடு அரசு? குறைந்தபட்சம் இந்தப் போராட்டங்களின் அரசியல் வலுவோடு இந்தியத் தலைமையமைச்சரை தமிழ்நாடு முதலமைச்சர் சந்தித்தாரா? தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைவிட, ஒரு தொகுதியின் இடைத்தேர்தல் உங்களுக்கு முக்கியமாகப் போய்விட்டதா?" என போராட்டக் குழுவினர் எழுப்பும் வினாக்களுக்கு விடையில்லை!

மெரினாவிலும், மதுரையிலும் போராடியோர் மீது காவல்துறையினர் வெறி கொண்டு தாக்கியதோடு, அவர்களை வசவு சொற்களால் இழிவுபடுத்தியுள்ளனர். மெரினா கடற்கரைக்குள் தற்போது ஒருவர் கூட நுழைய முடியாத அளவிற்கு கடும் சோதனைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்பே, ஏறுதழுவல் உரிமை மீட்புப் போராட்டக் களமான – தைப்புரட்சியை அடக்குமுறையை ஏவிக் கலைத்தது தமிழ்நாடு அரசு என்பதை யாரும் மறக்கவில்லை.

இந்நிலையில், தற்போது உழவர்களுக்காக எழுச்சி பெற்று வரும் போராட்டங்களை அடக்கத் துணிவதன் மூலம் தமிழ்நாடு அரசு என்ன செய்ய விரும்புகிறது? இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூட்டம் கூடும் உரிமையைப் பயன்படுத்தி, தங்கள் உரிமைக் குரலை மாணவர்களும் இளைஞர்களும் உழவர்களும் அறவழியில் எழுப்புகின்றனர். இதில் தமிழ்நாடு அரசுக்கு என்ன வலிக்கிறது?

அரசமைப்புச் சட்டம் தமிழர்களுக்குப் பொருந்தாது என்று இந்திய அரசு நடந்து கொள்கிறது. அதையே தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுகிறதா? தமிழர்களின் போராடும் உரிமையைப் பறிக்கும் துணிவு தமிழ்நாடு அரசுக்கு எப்படி வந்தது? தமிழ் மக்களின் கோரிக்கைகளை இந்திய அரசிடம் வலியுறுத்திப் பேச முன்வராத தமிழ்நாடு அரசு, போராட்டங்களை அடக்குவதன் மூலம் தில்லிக்குக் கங்காணி வேலை பார்ப்பது எட்டப்பன் செயல் அல்லவா? வெளிப்படையாகக் கூடிப் போராடுகின்ற வடிவத்தை தமிழ்நாடு அரசு இவ்வாறு தடுத்தால், நம் இளைஞர்களும் மாணவர்களும் கமுக்கமாகக் கூடி வேறு வழிகளில் போராட முயல்வார்களே, அதற்குத்தான் ஆசைப்படுகிறதா தமிழ்நாடு அரசு?

தமிழ்நாடு அரசு, உழவர்களுக்கான இந்த போராட்ட அலையை தடுக்கவோ, மட்டுப்படுத்தவோ முயலக்கூடாது. இந்தப் போராட்டங்களின் அழுத்தத்தை இந்திய அரசின் மீது திருப்பி, நம் ஞாயங்களை – கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டால் போதும்! செயல்படுமா தமிழ்நாடு அரசு?

●

தஞ்சையில் காவிரித்தாய்க் காப்பு தொடர் முற்றுகை அறப்போராட்டம், மார்ச்சு 28 அன்று எழுச்சியுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

காவிரி உரிமையை மீட்பதற்காக இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல் அமைதி காக்கும் தமிழ்நாடு அரசைக் கண்டித்தும், இந்திய அரசு காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைக்கக்கூடாது, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தியும், மார்ச்சு 28 முதல் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் அறப் போராட்டத்தை காவிரி உரிமை மீட்புக் குழு அறிவித்தது.

அதன்படி, மார்ச்சு 28 அன்று காலை 10 மணி முதல், தஞ்சை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, காவிரி உரிமை மீட்புக் குழுவில் உறுப்பு வகிக்கும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த உழவர்களும், தோழர்களும் திரளத் தொடங்கினர். இருநூறுக்கும் மேற்பட்ட காவல்துறையினர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலில் பலகட்டத் தடுப்புகளை ஏற்படுத்தியிருந்தனர்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் திரு. த. வெள்ளையன் போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். காவிரி உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாளர் தோழர் பெ. மணியரசன் அப்போது ஊடகவியலாளர்களிடம் பேசியதாவது:

“காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைத்து விட்டு, அதன் இறுதித் தீர்ப்பை இரத்துச் செய்யப் போவதாக இந்திய நீர்வளத்துறை அமைச்சர் உமாபாரதி நாடாளுமன்றத்தில் 15.3.2017 அன்று அறிவித்துள்ளார். அத்துடன் புதிதாக இந்தியா முழுமைக்குமான ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப்போவதாகவும். அதில் புதிதாகக் காவிரி வழக்கை விசாரிக்கத் தமிழ்நாடு அரசு மனுப் போட




# தஞ்சையில் காவிரித்தாய்க் காப்பு தொடர் முற்றுகை அறப்போராட்டம்



லாம் என்றும் அறிவித்தார். மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறுச் சட்டத் திருத்தத்தை முன் மொழிந்த போது, அந்த அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்.

காவிரிச் சிக்கலில் கன்னட வெறியோடு செயல்படும் கர்நாடகத்தின் அடாவடித்தனங் களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பா.ச.க. அரசின் மேற்படி அறிவிப்பு உள்ளது.

மனித நாகரிகம் தோன்றிய காலம் முதல் வளம் கொழிக்கும் தமிழ்நாட்டுக் காவிரிச் சமவெளியைச் சிதைத்து எண்ணெய், எரிவளி எடுக்கும் இரசாயனப் பாலை நிலமாக மாற்றிட இந்திய அரசு களமிறங்கியுள்ளது. இதற்காக எல்லை கடந்த பன்னாட்டு வேட்டை நிறுவனங் களுடன் இந்திய அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது. இந்த அநீதிகளைத் தடுத்து, நீதியை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு உருப்படியாக செயல்பட வில்லை.

இந்நிலையில், உயிரிழந்த உழவர் குடும்பங்களுக்கும், நட்டமடைந்துள்ள உழவர்களுக்கும் உரிய வறட்சி நிவாரணம் வழங்க தமிழ்நாடு அரசு சற்றொப்ப ரூ. 39,565 கோடி கேட்ட நிலையில், இந்திய அரசு வெறும் 1,748 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியுள்ளது. இது தமிழ்நாட்டை வஞ்சிக்கும் செயல்!

தமிழ்நாட்டு உழவர்களுக்கு முழுமையாக வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் உடனடியாக அமைக்க வேண்டும், உழவர் களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த மார்ச்சு மாதம் முதல் வாரத்திலிருந்து இந்தியத் தலைநகர் புதுதில்லியின், ஜந்தர் மந்தர் பகுதியில், கடும் குளிரையும், வெயிலை யும் பொருட்படுத்தாமல் - தென்னக நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் வழக்கறிஞர் அய்யாக்கண்ணு தலைமையில் தமிழ்நாட்டு உழவர்கள் போராடி வருகின்றனர். உரிய அளவில் வறட்சி நிவாரணம் வழங்காத இந்திய அரசு, தலைநகர் தில்லியில் நாள்தோறும் நடைபெற்று வரும் தமிழக உழவர்களின் போராட்டத்திற்கு உரிய மதிப்பைக் கூட அளிக்கவில்லை.



தமிழ்நாடு அரசு உரியவாறு இந்த உழவர் போராட்டத்தைப் பயன்படுத்தி, இந்திய அரசுக்கு அரசியல் அழுத்தம் கொடுக்க இதுவரை தகுந்த முயற்சி எடுக்கவில்லை. அரசியல் கட்சித் தலைவர்களும், பல்வேறு துறையினரும் மட்டுமே அவர்களை சந்தித்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.



இந்திய அரசு காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைக் கக் கூடாது. ஒற்றைத் தீர்ப்பாயத்தை அமைக்கக் கூடாது. உடனடியாக காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும். காவிரிச் சம வெளியை பாதுகாக்கப் பட்ட பசுமை மண்டல மாக அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு அரசு கோரிய வறட்சி நிவாரணத்தை முழு அளவிற்கு அளிக்க வேண்டும். இக் கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தத் தொடர் முற்றுகைப் போராட்டம் நடக்கிறது.



காவிரி உரிமையை நம்மால் மீட்க முடியவில்லையெனில், தண்ணீருக்காக நடைபெறப் போவதாகக் கூறப்படும் மூன்றாவது உலகப்போர் முதலில் தமிழ்நாட்டில் தொடங்கும். அடுத்தடுத்த நெருக்கடிகளுக்கிடையில், அடுத்தடுத்த ஊர்களுக்கிடையில், அடுத்தடுத்த மாவட்டங்களுக்கிடையில் தமிழர்களுக்குள் தண்ணீர்ச் சண்டை தொடங்கும்! இந்தப் பேரழிவுகளைத் தடுத்திடவே, காவிரி நீர் உரிமையை மீட்டிட, காவிரித்தாய் காப்பு தொடர் முற்றுகையை நடத்துகிறோம்" என்று பேசினார்.



தமிழக விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. த. மணிமொழியன், தமிழர் தேசிய முன்னணி பொதுச் செயலாளர் திரு. அயனாவரம் சி. முருகேசன், விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி நிறுவனத் தலைவர் திரு. குடந்தை அரசன், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு திருவாரூர் ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் இலரா. பாரதிச் செல்வன், தமிழ்த் தேசியப் பேரியக்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு, நாம் தமிழர் கட்சி தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் அ. நல்லதுரை, மனித நேய சனநாயகக் கட்சி மாவட்டச் செயலாளர் திரு. அகமது கபீர், இந்திய சனநாயகக் கட்சி மாவட்டச் செயலாளர் திரு. சிமியோன் சேவியராசு, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் திரு. சைனுள் ளாபுதின், காவிரி ஆறு பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் முகிலன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. பாண்டியன், உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தலைவர்களும் தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் சாமி. நடராசன், தோழர் பி.ஆர். பாண்டியன் தலைமையிலான அனைத்து விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் திரு. புண்ணியமூர்த்தி, திரு. திருப்பதி, தமிழர் நலம் பேரியக்க நிறுவனர் திரைப்பட இயக்குநர் மு. களஞ்சியம், தமிழ்நாடு இளைஞர் இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் அருண்சோரி, தேசிய மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் தோழர் அருள் தாஸ், உலகத் தமிழ்க் கழக புதுச்சேரி செயலாளர் திரு. தமிழூலகன் உள்ளிட்ட பல்வேறு உழவர் அமைப்பு மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், தோழர்களும் போராட்டப் பந்தலுக்கு நேரில் வருகை தந்து தெரிவித்து வருகின்றனர். சி.பி. எம்.எல். மக்கள் விடுதலைக் கலைக் குழுவினர் உழவர் சிக்கல் குறித்த பாடலைப் பாடினர்.



போராட்டத்தின் முதல் நாளான 28.03.2017 செவ்வாய் அன்று, தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி, வேதாரணியம் பகுதி த.தே.பே. தோழர்களும், 29.03.2017 அறிவன் அன்று சென்னை, புதுச்சேரி, பெண்ணாடம், சிதம்பரம், காட்டுமன்னார்குடி, சீர்காழி, ஒசூர், கிருட்டிணகிரி, தருமபுரி, கோவை, ஈரோடு த.தே.பே.

தோழர்களும், 30.03.2017 வியாழன் அன்று திருச்சி, மதுரை, திருச்செந்தூர், புளியங்குடி த.தே.பே. தோழர்களும் பங்கேற்றனர்.

தமிழக உழவர் முன்னணி தலைமை ஆலோசகர் தோழர் கி. வெங்கட்ராமன், பேரியக்கப் பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பி னர்கள் நா.வைகறை, பழ. இராசேந்திரன், க. விடுதலைச்சுடர், கோ. மாரி முத்து, இரெ. இராசு, க. முருகன், க. அருணபாரதி, பேரியக்கப் பொதுக்குழு உறுப்பினர்கள் தோழர் அ. தேவதாசு, தீந்தமிழன், தோழர்கள் இல. இராமசாமி (தஞ்சை), எல்லாளன் (சிதம்பரம்), இரா. வேல்சாமி (புதுச்சேரி), விசயன் (தருமபுரி), வெ. இளங்கோவன் (ஈரோடு), இராசாரகு நாதன் (திருச்சி), தமிழக உழவர்



முன்னணி தலைவர் திரு. மு. தமிழ்மணி, பொதுச் செயலாளர் திரு. தூ. தூருவாசன், கடலூர் மாவட்டச் செயலாளர் திரு. சி.ஆறுமுகம், தமிழக மாணவர் முன்னணி அமைப் பாளர் தோழர் சுப்பிரமணிய சிவா, மகளிர் ஆயம் தோழர்கள் ம. இலட்சுமி, செரபினா, பிரியா செல்வநாயகம், அபிராமி உள்ளிட்ட பல்வேறு பகுதி களிலிருந்து வந்த பேரியக்கப் பொறுப்பாளர்களும் தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

போராட்டத்தைக் கைவிட வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத் தரப்பிலும் காவல்துறைத் தரப்பிலும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதும், தற்காலிகக் கொட்டகைகள்



அமைத்து இரவு பகலாக மூன்று நாட்களைக் கடந்து போராட்டம் நடைபெற்று வருகின்றது. •

# நாகையில் தற்கொலையுண்ட உழவர் குடும்பத்தினருக்கு உதவி நிதி



நாகை மாவட்டம் – தலைஞாயிறு வட்டம், பிரிஞ்சு மூலை உழவர் முருகையன், கடந்த நவம்பர் 2016இல் நீரின்றி காய்ந்து கிடந்த தனது நிலத்தைப் பார்த்து விரக்தியுற்று தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு, இராணி என்ற மனைவியும், நித்யா என்ற மகளும், அரிகரன் என்ற மன வளர்ச்சி குன்றிய மகனும் உள்ளனர். அவர்களின் குடும்பத்திற்கு, தமிழ்த்தேசியப் பேரியக்கம் மற்றும் “ஊற்று” தன்னார்வ அமைப்பின் சார்பில் குடும்ப உதவி நிதி 25.3.2017 அன்று வழங்கப்பட்டது.

“ஊற்று” அமைப்பைச் சேர்ந்த திரு. மீனாதேவி மற்றும் சென்னை நண்பர்கள் சார்பில் நாமக்கல் தோழர் எஸ். பிரகாசம் அவர்களால் ரூ. 20,000 –மும், தமிழ்த்தேசியப் பேரியக்கம் திருத்துறைப்பூண்டி ஒன்றியக்குழு சார்பில் ரூ. 5,000–மும் அன்னாரின் குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டது.

பேரியக்க மூத்த தோழர் இரா. கோவிந்தசாமி, ஒன்றியச் செயலாளர் தோழர் ப. சிவவடிவேலு, ஒன்றியக்குழு உறுப்பினர் தோழர் தை. செயபால், தமிழக உழவர் முன்னணி செயற்குழு உறுப்பினர் தோழர் இரா. தனபாலன் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் பங்கேற்றனர். •

**கி.வெங்கட்ராமன்**

இந்திய நிதியமைச்சர் அருண் செட்லி நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ள “நிதிச் சட்டத் திருத்த முன் வடிவு 2017“, கட்சிகளுக்கும் குழுமங்களுக்கும் இடையிலுள்ள ஒட்டுண்ணி உறவைச் சட்டப்படியானதாக மாற்றுகிறது. ஏற்கெனவே இருப்பதையும் விட இன்னும் மோசமாகி கட்சிகளின் வழியாக கம்பெனிகளின் நேரடி ஆட்சி நடைபெறும் வாய்ப்பை, இச்சட்டத்திருத்தம் ஏற்படுத்துகிறது.

இந்திய நிதியமைச்சர் நாடாளுமன்ற மக்கள வையில் முன்மொழிந்துள்ள நிதி மசோதாவில், பல்வேறு சட்டங்களுக்கு 40 திருத்தங்கள் வரை முன் மொழியப் பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று, நிறுவனச் சட்டத்திற்கு (கம்பெனி சட்டம்) வரும் திருத்தமாகும்.

நிறுவனச் சட்ட விதி 182 அரசியல் கட்சிகளுக்கு தொழில் நிறுவனங்கள் நன்கொடை அளிப்பது பற்றி வரையறுக்கிறது. இதுவரை 182 படி ஒரு தொழில் குழுமம் தனது கடைசி மூன்று ஆண்டு நிகர இலாபத்தில் 7.5 விழுக்காடு வரை பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கலாம் என்று கூறியது. அவ்வாறு வழங்கப் படும் நிதி எந்தக் கட்சிக்கு எவ்வளவு தொகை என்பது குறித்த குழும நிர்வாக மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும் என்றும் அது கூறுகிறது. அந்நிதி நிறுவனத்தின் வரவு - செலவு அறிக்கையில் இடம் பெற வேண்டும்.



அருண் செட்லி முன்வைத்துள்ள திருத்தத்தின்படி, விதி 182இல் உள்ள நிபந்தனைகள் நீக்கப்படுகின்றன. இனி, ஒரு குழுமம் அல்லது ஒரு தொழில் நிறுவனம் தனது நிகர இலாபத்தில் பெரும் பகுதியைகூட ஒரு அரசியல் கட்சிக்கு நிதியாக வழங்கலாம்! எந்தக் கட்சிக்கு எவ்வளவு வழங்கப்பட்டது என்பது பற்றிய விவரங்களை பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை!

கட்சிகளுக்கும் கம்பெனிகளுக்கும் உள்ள உறவு முதலாளியம் தோன்றிய காலத்திலிருந்தே ஏற்பட்ட உறவுதான் என்றாலும், தாராளமயம் - உலக மயத்திற்குப் பிறகு கட்சிகளுக்கும் கம்பெனிகளுக்கும் இடையிலிருந்த இடைவெளி சுருங்கி, இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாதபடி பிணைந்து ஒன்று கலந்து விட்டன.

## கம்பெனிமயமாகும் கட்சிகள்

# நிதிச்சட்டம் திருத்தப்படுகிறது

அதிலும், இந்தியாவில் மோடி ஆட்சி என்பது இந்திய மற்றும் பன்னாட்டுக் குழுமங்களின் நேரடி ஆட்சியாகவே நடைமுறையில் இயங்குகிறது. அதானிக்கும் அம்பானிக்கும் வழங்கப்படும் பல எண்ணெய் வள ஒப்பந்தங்கள், துறைமுக ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் கணிசமான தொகை மோடி வழியாக பாரதிய சனதா கட்சிக்கு செல்கிறது. குசராத் பெட்ரோலியக் கழகத்தில் அதானிக்குக் கொடுத்த ஒப்பந்தம் மோடியின் பாரதிய சனதாவுக்கு நிதி வழங்குவதற்கென்றே ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தம் என்ற திறனாய்வும் உண்டு!

தமிழ்நாட்டில் எந்தப் பெரிய திட்டமும் செயல் படுத்தாமல் - எந்த அணையும் கட்டாமல் - எந்த வளர்ச்சித் திட்டமும் செயல்படாமல் மாநில அரசின் கருவூலம் காலியாகிக் கிடப்பதைக் காண்கிறோம். வரலாறு காணாத அளவில் 3 இலட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் கடனில் தமிழ்நாடு அரசு மூழ்கிக் கொண்டுள்ளது! ஆளும் அண்ணா தி.மு.கவின் ஊழல் பணத் தேவைக்காகவே இக்கடன் சுமையில் பெரும் பகுதி மக்கள் தலையில் விழுந்துள்ளது. இதில், கட்சித் தலைமைக்குக் கைமாற்றுவதற்கென்றே உருவாக்கப் பட்ட நிறுவனங்கள் உண்டு!

தி.மு.கவின் மாறன் சகோதரர்களின் 2ஜி ஊழலில், அரசுப் பணத்தை இவர்களுக்கும் இவர்களது கட்சிக்கும் கைமாற்றுவதற்கென்றே உருவாக்கப்பட்ட போலி நிறுவனங்கள் வெளிப்பட்டன.

> **கட்சிகளுக்கும் கம்பெனிகளுக்கும் உள்ள உறவு முதலாளியம் தோன்றிய காலத்திலிருந்தே ஏற்பட்ட உறவுதான் என்றாலும், தாராளமயம் - உலக மயத்திற்குப் பிறகு கட்சிகளுக்கும் கம்பெனிகளுக்கும் இடையிலிருந்த இடைவெளி சுருங்கி, இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாதபடி பிணைந்து ஒன்று கலந்து விட்டன.**

தெரிந்தால் போதும். மக்களுக்கும், நாட்டுக்கும் பதில் சொல்ல வேண்டிய அறக்கடமை அவர்களுக்கு இல்லை என்றாகிவிடும். மோடி அமித்சா மற்றும் செயலலிதா சசிகலா ஆகியோரைப் பார்த்தாலே இந்த ஆபத்தின் ஆழம் புரியும்!

கட்சிகளுக்கும் கம்பெனிகளுக்குமான கொள்ளைக்காரக் கூட்டணி, சட்ட அங்கீகாரம் பெறுகிறது! கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி நடத்தியபோது, அது கம்பெனி ஆட்சிதான் என்று வெளிப்படையாகத் தெரிந்தது. இப்போதும் இனியும் நடக்கும் கம்பெனி ஆட்சி, “கட்சி“ என்ற முகமூடி அணிந்து, “கட்சி” என்ற கையூட்டு முகவர் மூலம் செயல்படும்!

தேர்தல் பாதை நேர்மையாளர்களுக்கு இல்லை என்பது இறுதிக்கும் இறுதியாக இப்போது சொல்லப் பட்டுவிட்டது! அது மட்டுமல்ல, ஊழல் கட்சிகளில் கூட, சிறியக் கட்சிகள் இனி களத்தில் நிற்க முடியாது. கம்பெனிகளின் வரவு செலவில் வந்ததற்குப் பிறகு அதன் சிக்கன நடவடிக்கைகளுக்கும் கட்சிகள் உட்படவேண்டும். ஏதோ ஒன்றிரண்டு கட்சிகளுக்கு பணம் கொடுப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதையே, கம்பெனிகளின் நிதிக் கொள்கை வரையறுக்கும். சிறியக் கட்சிகள் கம்பெனிகளுக்கு தொந்தரவு! இனி, இந்தத் தொந்தரவுகளை கம்பெனிகளும் நீண்டநாள் அனுமதிக்கப் போவதில்லை.

இந்நிலையில் அருண் செட்லி முன்வைத்துள்ள இத் திருத்தம் செயலுக்கு வந்தால், அரசு என்பது நேரடியாக கம்பெனிகளின் நிறுவனமாக மாறுவதற்கு வழி ஏற்படுத்தும்! நாடு தழுவிய சாலைகள், கடலோரமெங்கும் மின்சார நிலையங்கள், பாலங்கள் என்று பல உருவங்களில் அரசுப் பணத்தை செலவு செய்ததாகக் காட்டுவதற்கு ஆளுங்கட்சி ஆட்களை வைத்து நிறுவனங்கள் தொடங்கி, அவற்றுடன் அரசு ஒப்பந்தங்கள் போட்டு அரசுப் பணம் அனைத்தையும் கட்சிகளுக்கு எடுத்துச் செல்ல வழி ஏற்படுகிறது.

இவ்வாறு கட்சி நடத்துபவர்களுக்கு மக்கள் வாக்குகளை தேர்தலில் பெறுவதற்கு உத்தி வகுக்கத்

வாண வேடிக்கைகளோடு நடக்கும் தேர்தல் திருவிழாக்களுக்கும், சனநாயகத்திற்கும் ஒரு துளி தொடர்புமில்லை! அதுமட்டுமல்ல, அதன் வெற்றி தோல்விக்குள் மக்கள் வாழ்வு முடங்கி விட வேண்டியதுமில்லை!

தேர்தல் களம் இனி கம்பெனிகளின் களம்! போராட்டக் களம் மக்களின் களம்! மக்கள், அவர்களது களத்தைப் புரிந்து நின்றால், வெற்றி நிச்சயம்! பலமாக இருக்க வேண்டுமென்றால், முதலை தண்ணீருக்குள் மட்டுமே இருக்க வேண்டும். ●

## தமிழ்த்தாத்தா உ.வே.சா.இல்லத்தை நினைவிடமாக மாற்ற தமிழுரிமைக் கூட்டமைப்பு கோரிக்கை!



ஓலைச்சுவடிகளிலிருந்த தமிழின் பண்டை இலக்கியங் களை ஒன்று திரட்டி அச்சிட்டுத் தந்து, தமிழினத்திற்குப் பெரும் தொண்டாற்றியவர் "தமிழ்த் தாத்தா" டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்.

தஞ்சை மாவட்ட உத்தமதான புரத்தில் 1855 பிப்ரவரி 19 அன்று பிறந்த இவர், தனது 17ஆம் அகவை யில் தமிழறிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அணுகி, அவர் மறையும் வரை அவரிடம் தமிழ்க்கல்வி கற்றார். முதலில், 1880இல் குடந்தை அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணியாற்றிய திரு. உ.வே.சா. பின்னர், சென்னை மாநிலக் கல்லூரியில் 16 ஆண்டுகள் பேராசிரியராகப் பணி யாற்றினார். அதனை நினைவுகூரும் வகையில், மாநிலக் கல்லூரி வளாகத்தில் அவருக்கு சிலை எழுப்பப்பட்டுள்ளது.

சென்னை வந்த பிறகு, திருவல்லிக்கேணி திருவேட்டீசு வரன் பேட்டையில் அவர் நிலையாகத் தங்கி, அவர் மறையும் வரை தமிழ்ப்பணிகளைத் தொடர்ந்து வந்தார். அவர் மறைவுக் குப் பிறகு அவரது மகன் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் அதே இல்லத்திலிருந்தே அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்தார்.

தற்போது, அவர் வாழ்ந்த இல்லம் முழுமையாக இடிக்கப் பட்டுவிட்டது. அதனை மறுபடியும் புதுப்பித்து, பெரும்புலவர் பாரதியாரின் இல்லம் நினைவில்லமாக அறிவிக்கப்பட்டதைப் போல், "தமிழ்த்தாத்தா" உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணியை நினைவுகூரும் வகையில் அதே இடத்தில் "நினைவு இல்லம்" உருவாக்க வேண்டும் என்று தமிழர் தேசிய முன்னணி, தமிழ்த்தேசியப் பேரியக்கம், உலகத் தமிழ்க் கழகம், தமிழ்த்தேச மக்கள் கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உறுப்பு வகிக்கும் "தமிழுரிமைக் கூட்டமைப்பு" சார்பில், தமிழ்நாடு அரசுக்கு 2015ஆம் ஆண்டு சனவரியில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழுரிமைக் கூட்டமைப்புத் தலைவர் புலவர் கி.த. பச்சையப்பனார் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கும், தமிழ்நாடு கல்வி அமைச்சருக் கும் 15.03.2017 அன்று இது குறித்து நினைவூட்டல் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசு, "தமிழ்த்தாத்தா" உ.வே.சா. அவர்களின் இல்லத்தை நினைவு இல்லமாக உருவாக்கி, அவரது தமிழ்ப்பணிக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும்!



கீழடி அகழாய்வுத் தலைவர் திரு. அமர்நாத்

## இடமாற்றத்தைக் கைவிட்டது இந்திய அரசு



மூவாயிரம் ஆண்டு களுக்கு முந்தைய தமிழர் நாகரி கத்தின் வரலாற்றுச் சான்றாக கிடைத்திருப்பது சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வு. இதற்கு முன் தமிழர்களின் பண்டைய நாகரிகத்தை எடுத்துக் காட்டுவதற்கு குடியிருப்புகள், இடு காட்டுத் தாழிகள் போன்றவை கிடைத்தன. ஆனால் கீழடியில் தான் பண்டைய தமிழர்களின் தொழிற்கூடங்கள் கிடைத்துள் ளன.

இந்த அகழாய்வைத் தொடர்வதற்குத் தொடர்ந்து இந்திய அரசு முட்டுக்கட்டைகள் போட்டுக் கொண்டே வந்தது. முதல் கட்ட அகழாய்வு 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இரண்டாம் கட்ட அகழாய்வு 2016 ஆம் ஆண்டு தொடர்ந்தது. ஆனால் அது முடிந்த பின் மூன்றாம் கட்ட அகழாய்வை இயல்பாகத் தொடங்காமல் இந்தியத் தொல்லியல் துறை தடுத்து வைத்திருந்தது. பல்வேறு தமிழ் அறிஞர்களும், தமிழின அமைப்புகளும் குரல் கொடுத்தபின் மூன்று மாதம் தாமதித்து மூன்றாம் கட்ட அகழாய்வைத் தொடங்கியுள்ளது. அதற்கு இன்னும் நிதி ஒதுக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி!

இந்நிலையில் கீழடி அகழாய்வுக்கு இன்னொரு சிக்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அகழாய்வில் தொடர்ச்சியாக தமிழ் ஆர்வத்துடன் ஆய்வுப்பணி செய்து வந்தவர் திரு. அமர்நாத் அவர்கள். அவர் கீழடி அகழாய்வுப் பிரிவுத் தலைவராகவும், இந்தியத் தொல்லியல் துறையின் பெங்களூர் மையக் கண்காணிப்பாளராகவும் செயல்பட்டு வந்தார். இப்பொழுது திரு. அமர்நாத் அவர்களை அசாம் தலைநகர் கவுகாத்திக்கு மாற்றினார்கள்.

இது குறித்து தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன் விடுத்துள்ள அறிக்கையில்,

"கீழடி அகழாய்வில் அக்கறை, அர்ப்பணிப்பு, திறமை ஆகியவற்றை வெளிப்படுத்தி சிறப்பாக செயல்பட்டு வந்த திரு. அமர்நாத் அவர்களின் பணியை கீழடி இழப்பது அந்த ஆராய்ச்சித் தொடர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தமிழ் உணர்வாளர்கள் ஐயுறுகிறோம்; அச்சப்படுகிறோம்.

எனவே, இந்தியத் தொல்லியல் துறை தலைமையானது திரு. அமர்நாத் அவர்களின் பணிமாற்ற ஆணையை மறு ஆய்வு செய்து கீழடியிலேயே அவரை மீண்டும் அதே பணியில் அமர்த்துமாறு தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்." என வலியுறுத்தினர்.

***( கடந்த 30.03.2017 அன்று, நடுவண் நிர்வாகத் தீர்ப்பாயம் - திரு. அமர்நாத் அவர்கள் கீழடியிலேயே பணியாற்றலாம் என்று ஆணையிட்டுள்ளது )*** •



தென்பெண்ணை ஆற்றைத் தடுத்துத் திருப்பிவிட கர்நாடக அரசு தீட்டியுள்ள புதிய திட்டத்தை இந்திய அரசு தடை செய்ய வேண்டுமென்று தமிழ்த்தேசியப் பேரியக்கம் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து, தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளரும், தமிழக உழவர் முன்னணி ஆலோசகருமான தோழர் கி. வெங்கட்ராமன் கூறியிருப்பதாவது :

தமிழ்நாட்டின் கிருட்டிணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 4 இலட்சம் ஏக்கர் விளைநிலங்களை செழிப்படையச் செய்து வரும் தென்பெண்ணை ஆற்றைத் தடுக்க, கர்நாடக அரசு புதிய திட்டம் தீட்டியுள்ளது.

கர்நாடக மாநிலம் நந்தி மலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆறு, கிருட்டிணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி வழியாக தமிழ்நாட்டுக்குள் நுழைகிறது. இந்தத் தண்ணீர் கெலவரப்பள்ளி அணையில் தேக்கி வைக்கப்பட்டு, ஓசூர் பகுதியிலுள்ள 8,000 ஏக்கருக்கு மேலான விளை நிலங்களுக்கும், அங்கிருந்து கிருட்டிணகிரி அணைக்கு வரும் தென்பெண்ணை ஆற்று நீர் மூலம் கிருட்டிணகிரி, காவேரிப்பட்டணம் உள்ளிட்ட பகுதிகளில் சற்றொப்ப 10,000 ஏக்கருக்கு மேலான விளை நிலங்களுக்கும் பாசன நீராகப் பயன்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் வழியாகப் பயணித்து சற்றொப்ப 4 இலட்சம் ஏக்கர் வேளாண் நிலங்களுக்கும், பல இலட்சம் மக்களின் குடிநீருக்கும் தென்பெண்ணை ஆறு பயன்பட்டு வருகிறது.

இத்தனைக்கும், தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக அரசு திட்டமிட்டு பல இலட்சம் லிட்டர் கழிவுகளைக் கலந்து மாசுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது, தென்பெண்ணை ஆற்றில் கலக்கும் வர்தூர் மற்றும் பெல்லாந்தூர் ஏரிகளின் நீரை ரூபாய் 400 கோடி செலவில் கர்நாடக மாநிலத்தின் மற்ற பகுதிகளின் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைக்காகத் திருப்பி விடும் புதிய திட்டத்தை கர்நாடக அரசு போட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்துக்குத் தேவையான நிதியை இங்கிலாந்து அரசிடம் கடனாகப் பெறவும், ஆற்று நீரைச் சுத்தப்படுத்தும் புதிய தொழில்நுட்பத்தைச் செயல்படுத்தவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்கானப் பணிகளை, இசுரேல் நாட்டைச் சேர்ந்த தகால் என்ற தனியார் நிறுவனம் செய்ய உள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ்வாறு தென்பெண்ணை ஆற்று நீர் தடுக்கப்பட்டால், தமிழ்நாட்டின் 4 இலட்சம் ஏக்கர் வேளாண்மையும், பல இலட்சம் மக்களின் குடிநீரும் வினாக்குறியாகும் ஆபத்து உள்ளது. இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, கர்நாடக அரசின் இப்புதியத் திட்டத்திற்குத் தடை விதிக்க வேண்டும். தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக அரசு கழிவு நீர் கலப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ்நாடு அரசு, உடனடியாக கவனம் செலுத்தி, இத்திட்டத்தைத் தடுத்து நிறுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

# தென்பெண்ணையைத் திருப்பிவிடும் கர்நாடக அரசின் திட்டத்தை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்!

## தமிழ்த்தேசியப் பேரியக்கம் வலியுறுத்தல்!



பெ.மணியரசன்

# தீர்ப்பு தீர்வாகாதாம்

## காவிரித்தீர்ப்பை காலிசெய்ய புதிய சட்டமசோதா

காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைத்து, அதன் இறுதித் தீர்ப்பை இரத்து செய்யும் நோக்கம் கொண்ட, இந்திய அரசின் மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர் தகராறுத் திருத்தச் சட்டம் 1956, நாடாளுமன்ற மக்களவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. நடுவண் நீர் வளத் துறை அமைச்சர் உமாபாரதி, 15.3.2017 அன்று இதை மக்களவையில் அறிமுகம் செய்தார்.

இதன்படி, “மாநிலங்களுக் கிடையலான தண்ணீர்ப் பூசல் தீர்ப்பாயம்” என்ற பெயரில் இந்தியா முழுமைக்குமான புதிய ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப்படும்.

“இந்தத் தீர்ப்பாயம்அமைக்கப்பட்டநா ளில் மற்றும் அந்நாளுக்குப் பின் செயல்பாட்டில் உள்ள தீர்ப்பாயங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும். கலைக்கப்படும் தீர்ப்பாயங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் அனைத்தும் ஒற்றைத் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்படும்”.

“ஒற்றைத் தீர்ப்பாயம் அமைப்பதற்கு முன் விசாரிக்கப்பட்டு முடிவுக்கு வந்த (Adjudicated and settled) முந்தையத்தீர்ப்பாயங்களின் தீர்ப்புகள் மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்ப்பூசல் சட்டத் திருத்தம் 2017இல், மறுபடியும் விசாரிக்கப்படமாட்டாது.

இதில் விசாரிக்கப்பட்டுமுடிவுக்குவந்த (Adjudicated and settled) என்பதன் பொருள்என்ன? விசாரிக்கப்பட்டு, இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட (Adjudicated and finaly awarded) என்ற சொற்களுக்கு மாறாக “முடிவுக்கு வந்த” என்ற சொற்களை ஏன் போட்டது மோடிஅரசு ?

சட்ட அகர முதலி அளிக்கும் விளக்கத்தின் படி ஒரு வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பு “(Adjudication) என்பது தொடர்புடைய தரப்பார் அனைவரையும் கட்டுப்படுத்தும் ஆணை ஆகும்.

ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டாலே அது அந்தக் கட்டத்தில் தீர்வு காணப்பட்டது (settled) என்று பொருள். காவிரிச் சிக்கல் பொருத்தளவில் தீர்ப்பு தீர்வாகாது என்கிறதா மோடி அரசு ?

தீர்ப்பாயம் என்பது நீதிமன்றம். உயர்நீதிமன்ற, உச்சநீதி மன்ற நீதிபதிகளைக் கொண்ட ஓர்அமர்வு! அது வழங்கிய தீர்ப்பை முடிவுக்கு வந்த தீர்ப்பு, முடிவுக்கு வராதத் தீர்ப்பு என்று பிரிப்பதேன்?

ஒரு நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், அத்தீர்ப்பைச்செயல்படுத்துவது அரசின் பொறுப்பும் அதிகாரமும் ஆகும். முடிவுக்கு வந்ததீர்ப்பு

என்பதற்கு என்னபொருள் என்று இச் சட்டத் திருத்தத் திற்கான நோக்கங்களும் காரணங்களும் என்ற அறிக்கை யில் (Statement of Objects and Reasons) நடுவண் நீர் வளத் துறை அமைச்சர் உமாபாரதி விளக்கம் கூறியுள்ளார்.

“மொத்தம் எட்டுதீர்ப்பாயங்கள்தீர்ப்புகள்வழங்கின. இவற்றில் மூன்று தீர்ப்புகளை மட்டுமே தொடர்பு டைய மாநிலங்கள் ஏற்றுக் கொண்டன. காவிரித் தீர்ப்பாம் 26 ஆண்டுகளாகவும் இரவி பியாஸ் தீர்ப்பாயம் 30 ஆண்டுகளாகவும் செயல்பாட்டில் உள்ள போதிலும், அவற்றால் இன்றுவரை வெற்றிகர மான தீர்ப்புகளை உருவாக்க முடியவில்லை. மேலும் இவற்றின் செயல்பாட்டிற்குக் காலவரம்பு கிடையாது“.

காவிரித் தீர்ப்பாயத்தால் வெற்றிகரமான தீர்ப்பை உருவாக்க முடியவில்லை என்று உமாபாரதி சொல் வதன் பொருள் என்ன? தொடர்புடைய மாநிலங்கள் இத்தீர்ப்பை ஏற்கவில்லை என்று பொருள்! இதில் உள்ள உண்மை என்ன?

காவிரித் தீர்ப்பாயம் 2007 பிப்ரவரி 5இல் இறுதித் தீர்ப்பு வழங்கிய போது, தமிழ்நாட்டுக்கு மிகவும் குறைந்த அளவு நீரே (192 ஆ.மி.க.) ஒதுக்கப் பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு மறுசீராய்வு மனுப் போட்டது. கர்நாடகமோ, தமிழ்நாட்டிற்கு அதிகமான தண்ணீர் ஒதுக்கப்பட்டு விட்டதுஎன்று மறுசீராய்வு மனுப் போட்டது. கேரளம், புதுவை மாநிலங்களில் சிக்கல் இல்லை.

பின்னர் தமிழ்நாடுஅரசு 192 ஆ.மி.க. தீர்ப்பை நிறைவேற்றினால் போதும் என்ற நிலைக்கு வந்துதான் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடத்தி வருகிறது. ஆனால் கர்நாடகம், தீர்ப்பாய விசாரணையின்போது, 30 ஆ.மி.க. தண்ணீர் மட்டுமே தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டும் என்று வாதாடியது. அதே நிலையில்தான் இப்போதும் இருக்கிறது.

மாநிலங்களால் ஏற்றுக் கொள்ளப் படாததீர்ப்பு என்று காவிரித் தீர்ப்பாயத் தீர்ப்பை உமாபாரதி கூறுவது முழுஉண்மையல்ல. கர்நாடகம் ஏற்றுக் கொள்ளாத தீர்ப்பு என்று நேரடியாகக் கூறிட, உமா பாரதிக்கு கூச்சம் இன்னும் மிச்சமிருக்கும் போலும்!

கர்நாடகத்தால் ஏற்றுக் கொள்ளப் படாத தீர்ப்பு என்பதால் அத்தீர்ப்பை வழங்கிய காவிரித் தீர்ப்பாயத் தைக் கலைத்திட மோடி அரசு முடிவு செய்துள்ளது. கர்நாடகம் வெளியே காட்டிக் கொள்ளாமல் கொண்டாடிக் களிக்கிறது.

தமிழ்நாட்டில் மோடி அரசின் இந்த மோசடியை காவிரி உரிமை மீட்புக்குழு தான் முதன் முதலில் பொது அரங்கத்தில் அம்பலப்படுத்தி, செய்தியாளர் சந்திப்பில் கூறியது. ஆனால் தமிழ்நாடு அரசோ அல்லது முதன்மை எதிர்க் கட்சியோ, தமிழ்நாட்டின் காவிரி உரிமையை நிரந்தரமாகக் காவு கொடுக்கும் மோடி அரசு நாடாளுமன்ற மக்களவையில் 15.3.2017 அன்று முன் வைத்துள்ள மேற்கண்ட திருத்த முன் வடிவு பற்றி வாய் திறக்கவில்லை.

தமிழ்நாடுஅரசும் அரசியல்கட்சிகளும் காவிரி உரிமையைக் காப்பதில் உண்மையான அக்கறை அற்று, அவ்வப்போது அடையாள முயற்சிகளை கணக்குக் காட்டும் போராட்டங்களை எடுப்பதுதான், கர்நாடகத் திற்கும் இந்திய அரசுக்கும் துணிச்சல் கொடுத்து தமிழ்நாட்டிற்கு எதிரான வன்முறைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் முறையே எடுக்கின்றன.

ஓர் உரிமை இயல் வழக்கில், நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு வழக்கில் உள்ள அனைத்துத் தரப்பையும் கட்டுப் படுத்தும். மாறாக வழக்கில் உள்ள அனைத்துத் தரப் பினரும் தீர்ப்பைக் கட்டுப்படுத்துவார்களா?

தீர்ப்புதான் அனைவரையும் கட்டுப்படுத்தும். தீர்ப்பைச் செயல்படுத்த மறுக்கும் தரப்பின் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கும்.

காவிரித்தீர்ப்பாயத்தின் இறுதித்தீர்ப்பை உச்சநீதி மன்றம் உறுதி செய்து, அரசிதழில் அதை வெளியிட ஆணையிட்டு,நடுவண் அரசும் 19.2.2013 அன்று அத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது.அதன்பிறகு அத்தீர்ப்பு உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குரிய சட்டஏற்பும், அங்கீகாரமும் பெற்றுள்ளது.

மாநிலங்கள் ஏற்கவில்லை, எனவே புதிதாக உரு வாக்கப்படும் ஒற்றைத் தீர்ப்பாயத்திற்கு காவிரி வழக்கை அனுப்புகிறோம் என்று காரணம் கூறி, சட்டமுன் வடிவை நாடாளுமன்றத்தில் மோடி அரசுதாக்கல் செய்துள்ளது.

கடந்த 2016 செப்டம்பர் 20ஆம் நாள் ஒரு மாதத்திற்குள் காவிரி மேலாண்மைவாரியம்அ மைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணை யிட்டது. கடைசி நேரத்தில் “அதை நாடாளுமன்றம் தான் அமைக்க வேண்டும்” என்று கூறி நரேந்திர மோடி அரசு தடுத்தது. இப்போது நாடாளுமன்றத்தில், தமிழ் நாட்டின் காவிரி நீர் உரிமையை நிரந்தரமாகத் தடுக்கும் சட்டமுன் வடிவை முன் வைத்துள்ளது.

இந்தப்புதிய ஒற்றைத் தீர்ப்பாயத்தின் சிறப்பு என்று மோடி அரசு கூறுவது என்னவெனில், இத்தீர்ப்பாயத் திற்கு வந்தவழக்கை சமரசப்பேச்சு நடத்தி இணக்கம் காண ஒன்றரை ஆண்டுகால வரம்பு வரையறுக்கப் பட்டுள்ளது. அதில் சமரசம் வரவில்லை எனில் மேற்படி ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கும் அமர்வு (Bench) மூன்றாண்டுகளுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற கால வரம்பாகும். அடுத்து 70 அகவைக்கு மேல் உள்ள நீதிபதி பதவி விலக வேண்டும்.

இவை தவிர, இத்தீர்ப்பாயத்தின் தீர்ப்பை செயல் படுத்தும் புதிய வழி முறை எதுவும் கூறப்பட வில்லை. இத்தீர்ப்பையும்நடுவண் அரசுதான் நிறைவேற்ற வேண்டும். இதே நடுவண் அரசுதான்! அது எப்படி இருக்கும்?

•

நா. வைகறை

# போக்குவரத்துக் கழகங்களைப் புறக்கணிக்கும் தமிழ்நாடு அரசு

தமிழ்நாட்டில் எட்டு மண்டலங்களாக உள்ள போக்குவரத்துத் துறையில் 293 பணிமனைகள் மூலமாக 22,450 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நாளொன்றுக்கு சற்றொப்ப இருபத்தைந்து இலட்சம் பேர் பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். தமிழ்நாடு அரசின் அக்கறையற்ற நடவடிக்கைகளாலும், கழக அதிகாரிகளின் ஊதாரித்தனத்தாலும் போக்குவரத்துத் துறை கடும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளது.

22,450 பேருந்துகளில் சுமார் 18,000 பேருந்துகள் வயது கடந்து (Age bar Vehicle) ஓடிக்கொண்டிருக்கின்றன.

2010-11 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை 2.04 கோடி என்றிருந்தது. தனியாருக்குச் சாதகமாக நேரத்தை விட்டுக் கொடுத்ததால் 2015-2016 ஆம் ஆண்டில் பயணிகள் எண்ணிக்கை 1.79 கோடியாக குறைந்து விட்டது. இதன் மூலம் இலட்சக்கணக்கானப் பயணிகளை போக்குவரத்துக் கழகங்கள் இழந்துள்ளன.

தொழிலாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுகிற வருங்கால வைப்புநிதி, அஞ்சல், காப்பீட்டுக் கழக பணமெல்லாம் சற்றொப்ப 5,000 கோடி ரூபாய் நிர்வாகச் செலவுக்கு எடுத்து செலவு செய்யப்பட்டுள்ளது.


இதனால் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியில் இருந்து கடன் பெற இயலவில்லை திருமணம், படிப்பு, மருத்துவச் செலவுக்கு கடன் பெற முடியாமல் கூடுதல் வட்டிக்கு வெளியாரிடம் கடன்பெற்று அல்லல் படுகின்றனர்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு ஒப்பந்தம் பேசப்படுகிறது. 1.9.2016 முதல் 13 ஆவது ஊதிய உயர்வு நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் பேச்சுவார்த்தை இப்போது தான் தொடங்கியுள்ளது.

உயர்ந்து வரும் விலைவாசி உயர்வால் மன உளைச்சலுடன் பணிபுரியக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஓட்டுநர் வேலைக்கு 5 இலட்சம், நடத்துநர் வேலைக்கு 7 இலட்சம் தொழில்நுட்ப பணிகளுக்கு 5 இலட்சம், அலுவலகப் பணியாளர்களுக்கு ரூ. 30 இலட்சம் என்று பணி நியமனத்துக்கு இலஞ்சம் பெறுகின்றனர். ஆனால், 240 நாட்கள் பணி முடிந்தபிறகும் பணி நிரந்தரம் செய்யாமல் குறைந்த ஊதியத்தில் வேலை வாங்குகின்றனர். இத்தொழிலாளர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் விழி பிதுங்கி அலைகின்றனர்.






சமவேலைக்கு சம ஊதியம் என்பதெல்லாம் இங்கு இல்லை! கூடுதல் பணி (OT) செய்பவர்களுக்குக் கூட அவர்களுக்குரிய ஊதியத்தை விட குறைவாக வழங்கு கின்றனர். "எங்கும் இலஞ்சம், எதிலும் இலஞ்சம்" என்பதே கழகங்களின் தாரக மந்திரம்!

பணியாற்றக் கூடிய ஊழியர்கள் இதுவென்றால் ஓய்வு பெற்ற ஊழியர்களின் நிலை வேதனையோ... வேதனை..!

### ஓய்வு பெற்ற ஊழியர்கள் நிலை

கூட்டுக் குடும்ப வாழ்வு சிதைந்து வருகையில் முதுமை காலத்தில் துணையாக இருப்பது ஓய்வூதிய தொகைதான். போக்குவரத்துக் கழகங்ககளில் 1998க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 64ஆயிரம் பேர்.

ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியத் தொகை, அகவிலைப்படி முறையாக வழங்கப்படுவதில்லை கடந்த சில மாதங்களாக ஓய்வூதியத் தொகையை போராடி இரண்டு தவணைகளில் பெற்றுள்ளனர்.

பணி ஓய்வு பெறும் நாளில் வருகால வைப்புநிதி, பணிக்கொடை, ஈட்டிய விடுப்புத் தொகை எதுவும் தருவதில்லை. நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து தவணைமுறையில் பணம் பெறுகின்றனர்.

போக்குவரத்து ஊழியர்களுக்கு அரசு ஓய்வூதியம் தருவதில்லை. தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதியைக் கொண்டு 1998இல் ஓய்வூதிய திட்டம் கலைஞர் ஆட்சியில் உருவாக்கப்பட்டது. கழகங்களின் பணம் பங்கும் சந்தையில் போடப் பட்டு நட்டம் என்று சொன்னார்கள்.

இந்நிலையில் அ.தி.மு.க அரசு வந்தவுடன் 01.04.2003க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் இல்லை என்று அறிவித்தது. ஓய்வூதியத் திட்டத்திற்கு பணம் இல்லை. அரசும் பணம் ஒதுக்கவில்லை. ஓய்வூதிய அறக்கட்டளையில் (Trust) பணம் இல்லாத நிலையில் காலாவதியாகிவிட்டது. ஓய்வு பெற்ற 64 ஆயிரம் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாதமொன்றுக்கு சுமார் 95 கோடி தேவை.

டீசல், பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச பயண மானியம் ரூ. 1516 கோடி அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தர வேண்டும். 2000 புதிய பேருந்துகள் வட்டாரப் போக்குவரத்துக்கு (RTO) பணம் போதுமா?

தமிழ்நாடு அரசின் இன்னொரு பொதுத்துறையான மின்வாரியக் கடன் தொகை ரூ. 22,815 கோடியை அரசே ஏற்றுள்ளது. திட்டங்கள், மானியத்திற்கு ரூ.72,000 கோடி தமிழக அரசு செலவிடுகிறது.

கல்வித்துறைக்கு ரூ. 30,615 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கு ஊதியத்திற்கு ரூ.46,332 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ஓய்வூதியத் திற்கு 20,527 கோடி வழங்குகிறது.

போக்குவரத்துக் கழகங்களில் நாளுக்கு நாள் ஏற்படும் வருவாய் இழப்பை சரிகட்ட தமிழ்நாடு அரசு முயலாதது ஏன்?

### மாற்று என்ன?

போக்குவரத்துக் கழகங்கள் அரசின் பொதுத் துறை நிறுவனமா? சேவை நிறுவனமோ? என்பதை தமிழ்நாடு அரசு முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

சேவை துறை என்றால், அரசின் மற்ற துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது போல போக்குவரத்துத் துறைக்கும் நிதி ஒதுக்க வேண்டும்.

அண்டை மாநிலங்களில் டீசல் விலை உயரும் போது பேருந்து கட்டணமும் உயர்த்தப்படுகிறது.

விரைவுப் பேருந்து, தாழ்தள பேருந்து என்று கட்டணக் கொள்ளை அடிப்பதை நிறுத்திவிட்டு அரசு நேர்மையாக செயல்பட வேண்டும்.

கேரளாவில் ஓய்வூதியத்திற்கு 50 விழுக்காட்டுத் தொகையினை அரசே வழங்குகிறது. சுங்கச் சாவடிகளில் அரசு பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது.

டீசலுக்கான வரிவிதிப்பை இந்திய - தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும். மானியம் வழங்க வேண்டும். 1.04.2003-க்குப் பிறகு பணியில் சேர்ந்த அனைவருக்கும் ஓய்வூதியம வழங்க வேண்டும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களைக் காப்பாற்ற 5000 கோடி ரூபாய் உடனே வழங்க வேண்டும். ●

கி.வெ.

இந்திய அரசு, ஆரிய இனப்பகையோடு தமிழ் நாட்டை குறி வைத்துத் தாக்குகிறது என்று தமிழ்த் தேசியப் பேரியக்கம் தொடர்ந்து கூறி வருகிறது. இந்திய அரசின் நடவடிக்கைகள், நாளுக்கு நாள் நம் கூற்றை வலுப்படுத்துவதாகவே உள்ளது.

நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் எடுக்கக்கூடாது என்று கிராம மக்கள் பெருந்திரளாகக் கூடிப் போராடி வந்த நிலையில், அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர "திட்டத்தை நிறைவேற்ற மாட்டோம்" என நடுவண் அமைச்சர் பொன். இராதாகிருட்டிணன் உறுதியளித்தார். அதன் பிறகு, நடுவண் பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், நெடுவாசல் போராட்டக் குழுவினரிடம் மக்கள் கருத்தைக் கேட்காமல் தமிழ்நாடு அரசின் இசைவு இல்லாமல் ஐட்ரோ கார்பன் திட்டத்தைக் கொண்டு வர மாட்டோம் என்று உறுதியளித்தார். அந்த உறுதியின் பேரிலேயே நெடுவாசலிலும், வடகாட்டிலும் நடைபெற்று வந்த தொடர் போராட்டம் கைவிடப் பட்டது.

இந்நிலையில், தமிழ்நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் 27.03.2017 அன்று, நெடுவாசல் உள்ளிட்ட 31 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பது தொடர்பாக தனியார் நிறுவனங்களுடன் "புரிந்துணர்வு" ஒப்பந்தத்தை, இந்திய அரசு கையெழுத்திட்டது. அதில் கையெழுத்திட்ட நடுவண் பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், "நெடுவாசல் ஹைட்ரோகார்பன் திட்டம் திட்டமிட்டபடி நடைபெறும்" என அறிவித்தார். ஆறு மாதங்களில் ஹைட்ரோகார்பன் எடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என, நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் எடுக்க இந்திய அரசிடம் உரிமம் பெற்றுள்ள கர்நாடக ஜெம் லேபராட்டரீஸ் நிறுவனமும் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டு மக்களிடையே இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், மாணவர்களும் இளைஞர்களும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் ஒன்று கூடி ஹைட்ரோகார்பன் திட்டத்தைக் கைவிடக் கோரியும், தமிழக உழவர்களைக் காக்கக் கோரியும் தன்னெழுச்சிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு மேலும் ஒரு இடியாக தேனி மாவட்டத்தின் பொட்டிபுரத்தில் நியூட்ரினோ ஆய்வகம் அமைப்பதை யாராலும் தடுக்க முடியாது என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. இந்திய அரசின் இணையமைச்சர் ஜித்தேந்திர சிங் 29.03.2017 அன்று மக்களவையில் கேட்கப்பட்ட எழுத்துப்பூர்வ வினாவுக்கு விடையளிக்கும்போதுதான் இதனைத் தெரிவித்துள்ளார்.



"பூவுலகின் நண்பர்கள்" தொடுத்த வழக்கில் கடந்த 21.03.2017 அன்று, தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் தேனி மாவட்டத்தின் பொட்டிபுரத்தில் நியூட்ரினோ ஆய்வகத்தை அமைக்கத் தடை விதித்தது. இந்த ஆய்வகத்திற்கு அனுமதி அளிக்க சூழலியல் ஆய்வறிக்கை அளித்த "நிறுவனமே ஆய்வுக்குத் தகுதியற்ற நிறுவனம் என்றும், அந்நிறுவனத்தின் அறிக்கை அடிப்படையில் நியூட்ரினோ ஆய்வகம் அமைப்பதை ஏற்க முடியாது என்று கூறியது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசு நியூட்ரினோ ஆய்வகத்தால் மக்களுக்கும் சூழலியலுக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய வல்லுநர் குழு அமைத்துள்ளது. இந்த சூழலில்தான், இந்திய அரசு இவ்வாறு தெரிவித்துள் ளது.

நியூட்ரினோ ஆய்வகம் அமைப்பதற்காக இந்திய அரசு தேர்ந்தெடுத்துள்ள தேனி மாவட்ட கேரளத்தின் இடுக்கி மாவட்ட சந்திப்புப் பகுதி என்பது, மிகச் செறிவான பல்வகை உயிர்மக் காட்டுப் பகுதியாகும். இங்கு, பல்வேறு சிற்றாறுகள் உருவாகி ஓடுகின்றன. பத்துக்கும் மேற்பட்ட சிற்றணைகள் உள்ளன.

இந்த மலையில்தான் பொட்டிபுரத்தில் மலை உச்சியிலிருந்து 1500 அடி ஆழத்திற்கு 132 மீட்டர் நீளம், 26 மீட்டர் அகலம், 20 மீட்டர் உயரமுள்ள குகையைத் தோண்டி அதன் நடுவில் உலகிலேயே மிகப்பெரிய ஐயாயிரம் டன் எடையுள்ள காந்தமய இரும்பு உணர்விக் கருவியை (Magnetised Iron Calorimeter detector - ICAL) நிறுவ உள்ளார்கள்.

இந்த ஆய்வகத்தை நிறுவ 1000 டன் ஜெலட்டின் வெடிக் குச்சிகளை 800 நாட்கள் வெடிக்கச் செய்து, 800 டன் பாறைகளைப் பெயர்த்து குகை அமைக்க உள்ளார்கள். இந்த ஆய்வகத்தை நிறுவ 37,000 டன் சிமெண்ட்டை பயன்படுத்தப் போகிறார்கள்.

இவ்வளவு பெரும் பரப்பில் ஏறத்தாழ 7 இலட்சத்து 50,000 கன அடிப் பாறையைப் பெயர்த்தெடுக்கும் அளவிற்கு வெடி வைத்துத் தகர்க்கும்போது, இம்மலையில் உள்ள நீரடுக்குப் பகுதிகள் (Aquifier) நிலைகுலைந்து நீரியல் நிலநடுக்கம் நிகழும் ஆபத்து உண்டு என்பதை பல அறிவியலாளர்கள் எடுத்துக் கூறினாலும், அரசும் நியூட்ரினோ திட்டம் சார்ந்த அறிவியலாளர்களும் மொட்டையாக மறுக்கிறார்கள்.


**"நீயும் இந்து நானும் இந்து" என்பார்கள். ஆனால், தமிழர்கள் "ஓம்" என்ற ஆன்மிகச் சொற்றொடரைக் கூட எழுத மறுத்து, மூன்று போல் எழுதும் இந்தி "ஓம்"மைதான் அவர்கள் வலியுறுத்துவார்கள். "நீயும் இந்து நானும் இந்து" என்பார்கள். ஆனால், தமிழீழத்தில் தமிழர்கள் வழிபடும் "இந்து" கோயில்கள் குண்டு வீசி அழிக்கப்பட்ட போதும், சிங்கள அரசால் புத்தர் சிலைகள் புகுத்தப்பட்டு உருமாற்றப்படும் போதும், அவர்கள் அமைதி காத்து நம்மை அழிக்கத் துணை நிற்பார்கள். இதுதான் அவர்களது ஆரிய இனவெறி!**


திட்டமிடப்பட்டுள்ள பொட்டிபுரம் ஆய்வகத்தை விட 600 அடி ஆழம், அதாவது 2100 ஆழத்தில் பூமிக்கு அடியில் அமெரிக்காவின் நியூமெக்சிகோ பாலைவனத்தில் இயங்கி வந்த Exo 200 என்ற செறிவூட்டப்பட்ட செனான் (Xenon) ஆய்வகம், நியூட்ரினோ குறித்த ஆய்வுகளை மேற்கொண்டிருந்த போது, 2014 பிப்ரவரியில் ஏற்பட்ட கசிவு காரணமாக அப்பகுதியைச் சுற்றி கடுமையான கதிரியக்கம் வெளிப்பட்டு, அந்த ஆய்வகம் மூடப்பட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அதன் அருகில் கூட யாரும் நெருங்க முடியாது என அந்த ஆய்வக நிர்வாகம் அறிவித்துள்ளது. (***காண்க:*** *Nature/ News, June 4, 2014*)

இப்படிப்பட்டத் திட்டத்தை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டிய அவசியம் இந்திய அரசுக்கு ஏன் வந்தது? இந்த ஆய்வகத்தை நிறுவுவதற்கு இமய மலையில் ஏன் அமைக்கக் கூடாது? "ரிஷிகள் நடமாடிய பகுதி" என்று கூறி ஒரே பதிலில் அவர்கள் கடந்து விடுகிறார்கள்.

பொட்டிபுரத்தில், ஆய்வகம் அமைக்கும் பகுதியில் அம்பரப்பர் கோயில் உள்ளது. காலங்காலமாக தமிழர்கள் அங்கு வழிபட்டு வருகிறார்கள். அந்த வழிபாடு தடை செய்யப்படப் போகிறது. தமிழர்களின் ஆன்மிக நம்பிக்கைகள் வடநாட்டினரைப் பொறுத்த வரையில் ஒரு பொருட்டே அல்ல என்பதையே இது காட்டுகிறது.

"நீயும் இந்து நானும் இந்து" என்பார்கள். ஆனால், தமிழர்கள் "ஓம்" என்ற ஆன்மிகச் சொற்றொடரைக் கூட எழுத மறுத்து, மூன்று போல் எழுதும் இந்தி "ஓம்"மைதான் அவர்கள் வலியுறுத்துவார்கள். "நீயும் இந்து நானும் இந்து" என்பார்கள். ஆனால், தமிழீழத்தில் தமிழர்கள் வழிபடும் "இந்து" கோயில்கள் குண்டு வீசி அழிக்கப்பட்ட போதும், சிங்கள அரசால் புத்தர் சிலைகள் புகுத்தப்பட்டு உருமாற்றப்படும் போதும், அவர்கள் அமைதி காத்து நம்மை அழிக்கத் துணை நிற்பார்கள்.

இதுதான் அவர்களது ஆரிய இனவெறி! இந்த இனவெறியே நாம் எதிர்த்தாலும், எந்த நாசகரத் திட்டத்தையும் நம் மீது திணிக்க அவர்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசின் இந்த ஆரிய இனவெறிப் பகையைப் புரிந்து கொண்டு, தமிழர்களாக நாம் அணிதிரள வேண்டும். அதுவே நம் இனத்தைக் காப்பாற்றும்! ●

# தஞ்சையில்
# ஓவியர் புகழேந்தி நூல் வெளியீடு




தமிழீழ ஆதரவு - தமிழர் உரிமை ஆதரவு - மதவெறி எதிர்ப்பு எனப் பல்வேறு தளங்களில் தமது ஓவியங்களின் மூலம் அழுத்தமான தடம் பதித்துள்ள ஓவியர் கு. புகழேந்தி அவர்கள் எழுதியுள்ள "***நானும் எனது நிறமும்***" - தன் வரலாற்று நூல், 25.03.2017 அன்று தஞ்சையில் வெளியிடப்பட்டது.

தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள பெசண்ட் அரங்கில், நடைபெற்ற இவ்விழாவுக்கு, மூத்த வழக்கறிஞரும் தமிழின உணர்வாளருமான தஞ்சை அ. இராமமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார். பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் நல். இராமச்சந்திரன், திரு. துரை. பாலகிருட்டிணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுப. உதயக்குமார் நூலை வெளியிட, திரு. ஆசிப் அலி பெற்றுக் கொண்டார். ஒரத்தநாடு இரா. குணசேகரன், வழக்கறிஞர் அ. நல்லதுரை, பொறியாளர் கென்னடி, திரு. இரா. இரத்தினகிரி, திரு. அமிர்தபாண்டியன், முனைவர் பா. சந்திரசேகரன், திரு. தங்க. வெற்றிவேந்தன், திரு. அ. உதயச்சந்திரன், திரு. கே. தமிழ்வாணன், திரு. குப்பு வீரமணி, பொறியாளர் கு. இரவிச்சந்திரன், பேராசிரியர் விஜயராமலிங்கம், பேராசிரியர் வி. பாரி, திரு. சொ. ஆறுமுகம் ஆகியோர் நூல்படி பெற்றனர்.

தோழர் பெ. மணியரசன், திரு. சீ.நா.மி. உபயதுல்லா, பேராசிரியர் அ. மார்க்ஸ், பேரா. உரு. இராசேந்திரன், திருமதி. புனிதா கணேசன், பேரா. இரா. காமராசு ஆகியோர் கருத்துரை வழங்கினர். நிறைவில், ஓவியர் புகழேந்தி அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம் ஆசிரியர் குழு உறுப்பினர் தோழர் நா. வைகறை, நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். நிகழ்வில், தமிழின உணர்வாளர்களும், கலை இலக்கிய ஆர்வலர்களும் திரளாகப் பங்கேற்றனர்.



*"பாமயன்",* சங்க கால வேளாண்மை முதல் தற் போதைய இயற்கை வேளாண் முறைகள் வரை அறிந்த தமிழ்நாட்டின் முகாமையான சூழலியல் மற்றும் இயற்கை வேளாண் அறிவியலாளர்!

திருநெல்வேலி மாவட்டத்தின் கடைய நல்லூர் அருகிலுள்ள சுந்தரேசபுரம் ஊரில் பிறந்தவர். சமூகவியல் முதுகலைப் பட்டமும், இதழியல் பட்டயப்படிப்பும் படித்த இவர், தற்போது முழுநேர இயற்கை வேளாண்மை செய்து வருகிறார்.

வேளாண் இறையாண்மை, அள்ளித் தரும் நிலம் - தற்சார்பு வேளாண்மைக்கான கையேடு, அணுக்குண்டும் அவரை விதைகளும் (2008) நியாய வணிகம் (2003), தாணுமாலயன் ஆலயம் (2008) உள்ளிட்ட பல நூல்களை எழுதியவர். தமிழர் கண்ணோட்டம் இதழிலும் அவ்வப் போது இவரது கட்டுரைகள் வெளியாகியுள் ளன.

இனி அவருடன்...

**பசுமை புரட்சி என்ற பெயரில் ரசாயனங் களால் சிதைக் கப்பட்ட நிலங்களும் நஞ்சாக்கப்பட்ட வேளாண்மையும் நம்மாழ்வார் மற்றும் தங்களை போன்றோர் கடும் முன்னெடுப்பால் மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கிறது. ஆனால் இயற்கை வேளாண்மை என்ற மறுமலரச்சியால் ஏற்பட்ட சந்தையை பெரும் கார்பரேட்களும் சாமியார்களும் கைப்பற்றி கொண்டிருக்கிறார்கள். இந்நிலை உழவர்களின் வாழ் நிலையில் என்ன விதமான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

எந்த ஒரு மாற்றமும், மாற்றுச் சமூக அரசியல் புரிதல் இல்லாமல் வெறும் தொழில் நுட்பமாக மட்டுமே எடுத்துச் செல்லப்படு மானால் அது இப்படிப் பட்டவர்களின் கைகளுக்குச் சென்றுவிடுவதில் வியப் பில்லை. தற்சார்பு அரசியல் பொருளாதாரச் சிந்த

# "உழவர்களின் தற்சார்பு அழிக்கப்பட்ட அறுபதாண்டுகள்"

## இயற்கை வேளாண் வல்லுநர் பாமயன் செவ்வி



னைகள் இத்துடன் எடுத்துச் செல்லப்படும் போதுதான் உழவர்களின் வாழ்நிலையில் அடிப்படையான மாற்றம் வரும்.

**உலகமயம் என்ற பன்னாட்டு வேட்டை கொள்கை யால் தமிழகத்தில் மரபுபாரந்த பெருமிதங்கள் வீழ்சசியடைந்து , நுகரவு பணபாடு கிராமம வரை ஊடுருறுவி வந்த நிலையில் ஜல்லிககட்டு போராட்டம சிற்றூர முதல பெரும் நகரங்கள் வரை இது வரை காணாத எழுசசியுடன் தமிழகத்தில் நடந்தறகான காரணமாக நீங்கள் எதை பாரககிறீரகள்?**

இரண்டு வகைப்பட்ட காரணிகள் இந்த சல்லிக் கட்டுப் போராட்டத்தில் செயல்பட்டுள்ளன. அகக் காரணிகள், புறக்காரணிகள்.

அகக்காரணிகள் என்பது இளைஞர்கள் இடையே இப்போது ஏற்பட்டு வரும் வாழ்வியல் அச்சம். குறிப்பாக ஊழல், இலஞ்சம், வேலைவாய்ப்பற்ற நிலை, சிலர் மட்டும் அதிக அளவில் பணம் திரட்டிக் கொள்ள வாய்ப்பு. அறத்திற்குப் புறம்பாவர்கள் வெற்றியாளர்களாக மதிக்கப்படுதல், தப்பான விழுமியங்களுக்குக் கிடைக்கும் மரியாதைகள் போன்ற உள நெருக்கடிகள் இளைஞர்கள் உட்பட பலரையும் உந்தித் தள்ளியது. புறக்காரணிகளாக, செயலலிதாவின் மறைவு, வழக்கமாக திமுக, அதிகமுக போராட்டங் களைக் கையாளும் அடக்குமுறை வடிவம் பன்னீர் செல்வம் இருந்தபோது நெகிழ்வாக அனுமதிக்கப் பட்டது, ஊடகங்கள் இப்படிப்பட்ட செய்திகளை வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்ட சூழல். (செய்தி ஊடகங்களின் பெருக்கம்) கூடவே சமூக வலைத் தளங்களின் வீச்சு ஆகிய அனைத்தும் பெரும் அலை களை உருவாக்கி மாபெரும் எழுச்சிக்கு வித்திட்டது என்று கூறலாம்.

**பொருளியல் அறிஞர் குமரப்பாவின் பொருளாதார மெய்யியலின் தேவையை நீங்கள் பேசியும் எழுதியும் வருகிறீரகள். பெருமளவு உறபத்தி என்பதை விட பெருமளவு மக்கள் செய்யும் உறபத்தி முறைதான் தேவை என்ற குமரப்பாவின் கோட்பாடு, முதலாளியததின அதிவேக வளரச்சியின் நேர எதிர திசையில் இருக்கிறது. உறபத்தி முறை இலாப வேடடையின் அடிபபடையில இருக்கும் போது குமரப்பாவின் கோட்பாடு, இனி எக் காலத்திலாவது நடைமுறைக்கு வர வாயபபுள்ளதா? அல்லது கறபனையான கனவாகவே மடிந்து விடுமா?**

இந்தக் கேள்விக்குப் பதிலாக கியூபாவின் வேளாண் மையைப் பார்க்கலாம். சோவியத் ஒன்றியம் உடைந்த போது, கியூபாவும் கடுமையாகப் பாதிக்கப் பட்டது. பெட்ரோல் கிடைக்கவில்லை. கரும்பைப் பெரிதும் நம்பியே கியூபப் பொருளாதாரம் இருந்தது. நிலங்கள் யாவும் 80 விழுக்காட்டிற்கு மேல் அரசிடம் இருந்தது.

இந்தச் சூழலில் பிடல் காஸ்ட்ரோ முற்றிலும் இயற்கை வேளாண்மைக்கு கியூபாவை மாற்றினார். அப்போது தான் தற்சார்பு என்பதன் அடிப்படையை அவர் உணர்ந்தார். நிலங்கள் மீண்டும் உழவர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. கூட்டுறவுச் சிறு பண் ணைகள் உருவாகின. பெரும்பண்ணைகள் ஒழித்துக் கட்டப்பட்டன. இயற்கை உரங்கள், இயற்கைப் பூச்சி எதிர்ப்புயிரிகள் என்று குடிசைத் தொழில்களாக தொழிநுட்பம் மாற்றப்பட்டது. குதிரைகளைக் கொண்டு உழுதார்கள். ஏறத்தாழ குமரப்பா கூறிய அனைத்தும் (அவரை அறியாமலேயே) அங்கு பின் பற்றப்பட்டது.

எனவே இனி வரும் காலங்களில் உலகில் ஏற்பட உள்ள ஆற்றல் பற்றாக்குறைக்கு குறிப்பாக பெட்ரோல், நிலக்கரி போன்ற புதுப்பிக்க இயலாத ஆற்றல்

வளங்களின் தட்டுப்பாட்டால் மிகப்பெரிய நெருக்கடி ஏற்படவுள்ளது.

எனவே இயற்கையைச் சிதைக்காத பொருளாதார முறை அல்லது அனைத்தையும் சுரண்டி ஏப்பம்விடும் முதலாளித்துவ வேட்டைப் பொருளாதார முறை இந்த இரண்டில் ஒன்றை எதிர்கொண்டாக வேண்டும். முதலாவது அடுத்த தலைமுறையை வாழ வைக்கும். இரண்டாவது இந்த மனித சமூகத்தின் முடிவுக்கு இட்டுச் செல்லும்.

இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகம் உள்ள நாட்டிற்கு பெருமளவு மக்கள் உற்பத்தி செய்யும் முறையே சிறந்தது. இன்று ஒரு புறம் வேலைவாய்ப்பு இல்லை என்று குரல் எழுப்புகிறோம், மறுபுறம் வேளாண்மைத்துறைக்கு ஆள் பற்றாக்குறை மிகக் கடுமையாக உள்ளது. இன்னும் பல சிறு தொழில் துறைக்கு ஆள் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. ஆனால் நாம் இன்னும் எந்திரமயமாக்கத்தால் வேலை வாய்ப்பைப் பெருக்கலாம் என்று பழைய பல்லவியையே பாடிக் கொண்டு இருக்கிறோம். இன்று உலகம் முழுமையும் பேசக்கூடிய நீடித்த மேம்பாடு (Sustainable Development) என்ற கருத்து முற்றிலும் குமரப்பாவினுடையது. ஷூமேக்கர் போன்றவர்கள் குமரப்பாவின் கருத்துகளை அப்படியே எடுத்தாண்டுள்ளனர்.

**ஏறு தழுவல், மீத்தேன், ஷேல், கெயில் போன்வைகளில் மக்களின் எழுச்சிமிகு போராட்டங்களின் மறுபக்கமாக அறிவியல் சாரந்த மாற்றுக் கருத்துகளின் வெளி இருட்டடிக்கப்படுகிறது என்ற அறிவு ஜீவிகளின் கருதது பறறி உஙகள கருதது என்ன?**

அறிவுஜீவிகள் எனப்படும் பல அறிவாணர்களுக்கு நிறையப் புரிதல் போதாமை உள்ளது. அறிவியல் வேறு தொழில்நுட்பம் வேறு. நாம் இரண்டையும் புரியாமல் குழப்பிக் கொள்கிறோம். புவிஈர்ப்பு விசை செயல் படுகிறது என்பது அறிவியல், அந்த விசையைப் கொண்டு மலைமேல் உள்ள நீரை கீழே இறங்கச் செய்து மின்சாரம் எடுப்பது என்பது தொழில்நுட்பம். இந்தக் தொழில்நுட்பங்கள் ஆக்கத்திற்கா அழிவிற்கா என்று காண வேண்டும். அறிவியல் சார்புத்தன்மை அற்றதாக இருக்கலாம். ஆனால் தொழில்நுட்பத்திற்கு சார்புத் தன்மை உண்டு.

ஒரு நாடு மனிதனே மலத்தை அள்ளுவதை அனுமதித்துக் கொண்டு அதற்கு தொழில்நுட்ப ரீதியாக தீர்வு காணாமல் நியூட்ரினோவிற்கு சில ஆயிரம் கோடிகளை ஒதுக்குவது எப்படி சார்புத் தன்மை அற்றதாக இருக்கும்? அறிவியல் அறிஞர்கள் அல்லது அறிவு ஜீவிகள் சார்புத் தன்மை கொண்டவர்களே! சிலர் பாதிக்கப்படும் மக்கள் பக்கம் நின்று பேசுவார்கள். சிலர் பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் பக்கம் நின்று பேசுவார்கள்.

**அணு உலை, நியூட்ரினோ போன்றவற்றை எதிர்த்து மக்கள் போராடி வரும் நிலையில், இடது சாரி தேர்தல் கட்சிகள் அரசு இயந்திரங்களோடு சேர்ந்து கொண்டு தீவிரமாக ஆதரிப்பதை எப்படி பார்க்கிறீர்கள்?**

ஒரு காலத்தில் மக்கள் தொழிற்சாலைகள் வேலை தரும் என்று நம்பி ஆதரித்தார்கள். தொழிற்சாலை வேண்டும் என்று கூட போராடினார்கள்.

இன்று மக்கள் தொழிற்சாலைகள் வேண்டாம் என்று போராடுவதைக் காண முடியும். மாசுபடுத்தும் தொழிற் சாலைகளால் விவசாயம் மட்டும் அழிந்து விடிவில்லை, கூடவே குடிநீர் மூலங்களும் அழிந்து விட்டன. விவசாயிகள் தற்கொலைக்கு ஆளாகின்றனர். நோய்களின் பெருக்கம், பெரும் மருத்துவமனைகளின் பெருக்கம் என்று எளிய மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். மார்க்சியக் கோட்பாட்டு அடிப் படையில் நோக்கினால், பாதிக்கப்படுவர்கள் பக்கமே இடதுசாரிகள் நிற்க வேண்டும். அவர்கள் அரசு எந்திரத்தை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது நீதியில்லை.

**வேளாண் முறையில், அரசு இயந்திரங்களை எதிரத்து, மிகப் பெருமளவு மாற்றங்களை கொண்டு வந்த தங்களை போன்றவர்களால் ஏன் ஒரு தரபடுத்தப்பட்ட கூட்டுறவு சந்தையை உருவாக்க முடியவில்லை?**

நம்முடைய உழவர் பெருமக்களுக்கு பல நெருக்கடிகள் உள்ளன. குறிப்பாக உழவர்களின் தற்சார்பு கடந்த அறுபது ஆண்டுகளில் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது. விதை, உரம், தொழில்நுட்பம் என யாவும் அவர்களது கையில் இருந்து அகற்றப்பட்டு பெருங் குழும நிறுவனங்களின் கைகளுக்கு கொடுக்கப் பட்டாயிற்று. இந்திய சனநாயகத்தில் யாரெல்லாம் சேர்ந்து குரல் எழுப்புகிறார்களோ அவர்களது குரலே எடுபடும். அவர்களுக்குச் சாதகமாக சட்டமும் திட்டமும் ஆக்கப்படும். நமது உழவர்களின் வாழ்க்கை முறையே உதிரித் தன்மையாக மாற்றப்பட்டுவிட்டது. பிறர்போல் அவர்கள் போராட்டக் களத்தில் சிறை சென்றால் எந்த பொருளாதார உத்தரவாதமும் கிடையாது. அவர்களது மாட்டுக்குத் தண்ணீர் வைக்கக் கூட நாதி கிடையாது.

எனவே அவர்களது குரல் கேளாக் குரலாகவே ஆகிவிட்டது. அடுத்தது சந்தை, நல்ல விளைச்சல் இருக்கும்போது சந்தையில் விலை குறைவாக இருக்கும். விலை அதிகமாக இருக்கும்போது விளைச்சல் குறைவாக இருக்கும். எந்த வழி போனாலும் உழவருக்குச் சந்தையால் பயனில்லை. அவரால் அவரது பொருளுக்கு விலை வைக்க இயலாது. எனவே நாம் இந்தச் சிக்கல்களில் ஒன்றை மட்டுமே முகம் கொடுக்க முடிந்தது. அதாவது தற்சார்புத் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளோம். இன்னும் போக வேண்டிய தொலைவு அதிகம் உள்ளது.

**காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாற்றில் அண்டை அரசுகளால் நமது உரிமை பறிக்கப்பட்டு வருகிறது.**

**அதற்கான உரிமை போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், அந்நீர் இல்லாமலேயே மாற்றுப்பயிர் செய்ய வேண்டும், நீர் மேலாண்மை வேண்டும் என்ற குரல் களின் பின் உள்ள அரசியல் என்ன?**

உரிமை என்பது வேறு, கடமை என்பது வேறு ஆனால் இரண்டிற்கும் நாம் பொறுப்பேற்க வேண்டும். எந்த அளவுக்கு உரிமைக்காகப் போராடுகிறோமோ, அந்த அளவிற்கு நாம் நீர் மேலாண்மையிலும் கடமை யாற்ற வேண்டும். ஆனால் உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டு மாற்றுப் பயிருக்கு மாற வேண்டும் என்று கூறுவது கரவான பேச்சு, நம்மைக் காட்டிக் கொடுக்கும் பேச்சு.

**பசுமை புரட்சி, வெண்மை புரட்சி, நீலப் புரட்சி. பசுமை, வெண்மை, நீலம், புரட்சி எல்லாமே நேர்மறையான சொற்கள். நம்மை ஆளும் அரசுகள் நமக்கு வழங்கிய வரங்களாக சொல்லப் பட்ட திட்டங்கள். அந்த வரங்களின் விளைவுகளை சொல்லுங்கள்?**

சோவியத் ஒன்றியம் தொடங்கி உலகில் தோன்றிய புரட்சிச் செயல்பாடு உலகத்தில் உள்ள முதலாளித்துவ சக்திகளை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அதன் விளைவாக பல மாற்றங்களை அவர்கள் பல நாடுகளில் செய்து கொண்டார்கள். புரட்சி என்ற சொல்லையும் அதேபோல பயன்படுத்த முனைந்தார்கள். அதில் முதலாவது பசுமைப் புரட்சி என்ற சொல்லாட்சி. பின்னர் வெண்மைப் புரட்சி, நீலப் புரட்சி முதலியவை.

ஆனால் இந்தப் புரட்சிகளுக்குப் பின்னர் நடந்த மாற்றங்கள் வேதனையானவை. குறிப்பாக பசுமைப் புரட்சிக்குப் பின்னர் உழவர்கள் கடுமையான கடனுக்குள் தள்ளப்பட்டார்கள், வெண்மைப் புரட்சிக் குப் பின்னர் பால் உற்பத்தியை மட்டுமே மையமாக வைத்த பொருளாதாரம் உழவர்களை மேலும் கடனா ளியாக்கியது. நீலப் புரட்சிக்குப் பின்னர் மீனவர்களின் கடல்வளம் கொள்ளைபோனது, கடலோரங்கள் இறால் பண்ணைகளால் மாசுபட்டன.

**அழிக்கப்பட்ட நீர் நிலைகள், கட்டிடகாடுகளாகி வரும் விளை நிலங்கள் இலவசங்கள், போதை யோடு முடிவு பெறும் நாட்கள், நிரந்தர வேலைகள் இழப்பு, ஆங்கில கல்வி பெருக்கம் என்று எதிர்காலம் அச்சுறுத்தலாக இருக்கிறது. அதே நேரம் நீர் நிலைகளை மீட்பதற்கான அங்கங்கே இளையோர் மத்தியில் தோன்றும் எழுச்சி களும் செயல்பாடுகளும் மரபுக்கு திரும்பும் ஏக்கமும் சமூகத்தில் பூத்து வருகிறது. எப்படி இருக்கும் எதிர்கால தமிழகம்?**

ஆயுதங்கள்தாம் தீர்மானிக்கும் என்றால் அடி மைக்கு விடுதலையே கிடையாது. ஆனால் இயற்கைக்கு அளப்பரிய ஆற்றல் உண்டு. இளைஞர்களிடம் உருவாகி வரும் புதிய எழுச்சி நம்பிக்கை விதையை விதைக்கிறது. நாம் அந்த எழுச்சி நெருப்பை அணையாமல் காக்க வேண்டும். அதுவே நம் கடமை.

*நேர்கண்டவர்:* **ப. செம்பரிதி**

# காலமாதல்

மரணம்
ஒரு மனிதனை
காலமாக்கி விடுகிறது

உண்மையில்
எல்லா மனிதர்களையும்
மரணம்
ஒரே விதமாக
காலமாக்கி விடுவதில்லை

குறுகிய
நீண்ட
மிக நீண்ட
என வகை பிரித்து
காலமாக்கி விடுகிறது

காலமான
உடல் சிதையுமுன்னே
காலமான சிலரின் காலம்
காலமாகி விடுகிறது

காலமாவதற்கு முன்
அவருடன்
காலமாகமல் இருப்பவர்கள்
காலமாகும் வரை
சிலர்
காலமாகமல் இருப்பார்கள்

காலமான பின்பும்
பிறப்பவர்கள் காலத்திலும்
சிலர்
காலமாகமல் இருப்பார்கள்

காலம்
காலமாகும் வரையிலும்
மிகச் சிலர்
காலமாக இருப்பார்கள்

காலம்
வாழும் காலம்
வாழும் காலத்தின்
வாழ்வால் நிலைக்கிறது

**- செம்பரிதி**

# கடலூரில் நச்சுவாயுத் தாக்கி 3 தொழிலாளர்கள் பலி:
# அரசின் அலட்சியம் மட்டுமல்ல அரசே கடைபிடிக்கும் தீண்டாமை!



கடலூரில் பாதாளச் சாக்கடைக் குழாயில் ஏற்பட்ட அடைப்பை நீக்கும் பணியில் ஈடுபட்ட மூன்று தொழிலா ளர்கள், நச்சு வாயுத் தாக்கி பலியான செய்தி பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

கடலூர் மோகினி பாலம் அருகே பாதாளச் சாக்கடைத் திட்டக் குழாய்களை பராமரிக்கும் பணியில் நகராட்சி நிர்வாகத்தால் அனுமதிக்கப் பட்ட தனியார் நிறுவனம், அக்குழாயில் ஏற்பட்ட அடைப்பை நீக்கும் பணியில் கொடிக்கால்குப்பம் பகுதியைச் சேர்ந்த அப்புக்குட்டி என்ற ஜெயக்குமார், வேலு, புதுச்சேரி – சோரியாங்குப்பம் முருகன் ஆகிய மூன்று ஒப்பந்தத் தொழிலாளர்களை ஈடுபடுத்தியுள்ளது.

பாதாளச் சாக்கடையில் இறங்கி தூய்மைப் பணியில் ஈடுபட்டபோது, நச்சு வாயுத் தாக்கி அம்மூவரும் பலியானார்கள். அவர்களது உடலை பெற்றுக் கொள்ள மறுத்து, அவர்களது உறவினர்களும், பல்வேறு அமைப் பினரும் போராட்டம் நடத்திய நிலையில்தான், மாவட்ட நிர்வாகம் அவர்களது குடும்பத்தினருக்கு இழப்பீடு அளிக்கவும், தனியார் நிறுவனத்தினர் மீது வழக்குப் பதியவும் முன்வந்துள்ளது. மேலும், குடிநீர் வடிகால் வாரிய உதவிப் பொறியாளர்கள் இருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் கொடுமைக்கு எதிராக நடைபெற்ற தொடர் போராட் டங்கள், நீதிமன்ற வழக்குகள் ஆகியவற்றின் விளைவாக “கையால் மலம் அள்ளுவோரை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் உலர் கழிவறைகள் கட்டுதல் தடுப்புச்சட்டம் – 1993” என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து 1997–இல் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தில் உள்ள குறைபாடுகள், அவை செயலாவதில் உள்ள குளறுபடிகள், ஆகியவை குறித்து பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு அவற்றின் விளைவாக 2013–ஆம் ஆண்டு – மனிதக் கழிவுகளை மனிதர்கள் அள்ளுவதற்குத் தடை விதித்து சட்டம் (Prohibition of Employment as Manual Scavengers and their Rehabilitation - 2013) இயற்றப்பட்டது.

அதன்பிறகு, 2014ஆம் ஆண்டு – கையால் மலம் அள்ளும் பணிகளை ஒழித்து இதில் ஈடுபட்டுள்ளோருக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பாக ‘தூய்மைத் தொழி லாளர்கள் சங்கம் – எதிர்– இந்திய ஒன்றிய அரசு’ (Safai Karamchari Andolan -Vs- Union of India) என்ற வழக்கில் 2014 மார்ச் 27 அன்று அன்றைய தலைமை நீதிபதி பா. சதாசிவம் தலைமையில் ரஞ்சன் கோகோய், ரமணா ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற ஆயம் தீர்ப்பு வழங்கியது.

இவ்வாறான பணிகளில் உரிய பாதுகாப்புக் கருவிகள் இல்லாமல் ஈடுபடக்கூடாது என சட்டமும் நீதிமன்றத் தீர்ப்பும் கூறி வந்த நிலையில், கடலூரில் அந்தத் தனியார் நிறுவனம் இத்தொழிலாளர்களை விதிமுறைகளை மீறி அப்பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

ஆயிரம் அடிகளுக்குக் கீழ் நிலத்திற்குள் புதைந்துள்ள மீத்தேன் உள்ளிட்ட கனிம வளங்களைத் தோண்டி யெடுக்க தொழில்நுட்பக் கருவிகளை வைத்துள்ள இதே அரசு, சில அடிகளில் உள்ள கழிவுகளை அகற்ற இயந்திரங்கள் இல்லாமல் தவிப்பதாக நாடகமாடி வருகின்றது. தமிழ்நாட்டில், கடந்த பத்தாண்டுகளில் மட்டும் இவ்வாறானப் பணிகளில் ஈடுபட்ட 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். தூய் மைப் பணியாளர்கள் மீதான அரசின் அக்கறையின்மை யும், அலட்சியமுமே தொடர்ந்து இது போன்ற உயிர்ப்பலி நிகழ்வுகளுக்கு அடிப்படைக் காரணமாகும்! இது மட்டுமல்ல, மனிதக் கழிவுகளை மனிதர்களே அப்புறப்படுத்தவும், இது போன்ற பணிகளில் ஈடுபடவும் வற்புறுத்தப்படுவது அரசே கடைபிடிக்கும் தீண்டாமை ஆகும்.

எனவே, தமிழ்நாடு அரசு உடனடியாக மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தி, மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் தொழிலாளர்களை ஈடுபடுத்தும் மாநகராட்சி, நகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளையும், அதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் ஒப்பந்த நிறுவனங் களையும் கண்டறிந்து தண்டிக்க வேண்டும். பாதாளச் சாக்கடைத் தூய்மையாக்கலில் உறிஞ்சுக் கருவிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தூய்மைப் பணியாளர் களுக்கான பாதுகாப்புக் கருவிகளை உடனடியாக வாங்கிப் பயன்படுத்தவும், அது குறித்த விழிப்புணர்வைப் பரவலாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடலூரில் பலியாகியுள்ள இம்மூன்று இளம் தொழி லாளர் குடும்பங்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும், உறுதியளித்தபடி அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கேற்ப அரசுப்பணி வழங்க வேண்டும்.

**கி.வெங்கட்ராமன்**

# கோடிக்கணக்கானவர்களை வீதிக்கு விரட்டும் தானியங்கிமயம்!

க. அருணபாரதி



கைநிறைய ஊதியம் அளிப்பதாகச் சொல்லப் படும் தகவல் தொழில்நுட்பத்துறை, தற்போது வீழ்ச்சி திசைநோக்கி சென்று கொண்டுள்ளது. கணினியின் துணையோடு மேற்கொள்ளப்பட்டு வந்த நிர்வாகப் பணிகளை, தானே இயங்கிக் கொள்ளும் வகையில் அதிநவீனத் தொழில்நுட்பங்களோடு சீரமைத்து, அவற்றை தானியங்கிமயமாக்கும் (Automation) புதிய போக்கு வளர்ந்து வருவதே, இதற்குக் காரணம்!

கடந்த மார்ச்சு 19 அன்று, முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனமான சி.டி.எஸ். நிறுவனம் தனது பணியாளர்களில் சற்றொப்ப 6,000 பேரிலிருந்து 10,000 பேர் வரை பணிநீக்கம் செய்வதற்கான நட வடிக்கையில் இறங்கியுள்ளதாகத் தகவல் வெளியானது.

சி.டி.எஸ். நிறுவனத்தின் மொத்தப் பணியாளர் எண்ணிக்கையில், அது 2லிருந்து 3 விழுக்காடே என்றாலும், முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலேயே பணிநீக்கம் நடைபெறுவது கடைக் கோடி தகவல் தொழில்நுட்ப நிறுவ னங்கள் வரை எதிரொலிக்கலாம் என் பதால், அந்த செய்தி தகவல் தொழில் நுட்பத்துறைப் பணியாளர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

சி.டி.எஸ். நிறுவனத்தில் மட்டு மின்றி, மைக்ரோ சாப்ட் நிறுவனம் 2,800 பேரையும், ஐ.பி.எம். நிறுவனம் 5000 பேரையும் பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளன. இன்னொரு முகாமையான நிறுவனமான சிஸ்கோ நிறுவனம் தனது மொத்தப் பணியாளர் களில் 7 விழுக்காட்டினரை பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு தொடங்கி உலகின் முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் இதுபோன்ற பணி நீக்க நடவடிக்கைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றே வந்துள்ளன. கடந்த ஓராண்டில் சற்றொப்ப 8,000த்திலிருந்து 9,000 பணியாளர்களை ஏற்கெனவே பணி நீக்கம் செய்து விட்டதாக இன்போசிஸ் நிறுவனம் கடந்த சனவரியில் (2017) தெரிவித்திருந்தது.

இன்னொரு முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான விப்ரோ நிறுவனம், கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரலில், தனது பணியாளர்களில் 47,000 பேரை அடுத்த மூன்றாண்டுகளில் பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்தது. கடந்த 2016 மே மாதம், உலகின் முன்னணி கைப்பேசி தயாரிப்பு நிறுவனமான பாக்ஸ்கான் நிறுவனம் ஒரே நேரத்தில் சற்றொப்ப 60,000 பேரை பணியிலிருந்து நீக்கியது.

இன்னொரு புறத்தில், தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவதும் குறைந்து வந்துள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு - ஒவ்வொரு நிதியாண்டிலும் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் வழக்கமாக ஏற்படுத்தும் புதிய வேலை வாய்ப்புகள், 24 விழுக்காடு குறைந்தது. இது, இந்த ஆண்டு (2017) மேலும் குறைந்து 40 விழுக் காடாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**தானியங்கிமயத்தால் கோடிக்கணக்கானவர்கள் பணியிழந்து வீதிக்கு வரப்போகும் சூழலில், இந்தத் தகவல் தொழில்நுட்பத்துறை நிறுவனங்களோ இன்னும் பல்லாயிரம் கோடிகள் இலாபம் ஈட்டப் போகின்றன. தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றலாம் என்ற நம்பிக்கையோடு ஏற்கெனவே பல இலட்சம் கணினிப் பொறியாளர்களை உருவாக்கியுள்ள தமிழ்நாடு, இதனால் மேலும் பாதிப்புகளை சந்திக்கவுள்ளது.**

சி.டி.எஸ். நிறுவனம் கடந்த 2015ஆம் ஆண்டு, வழக்கமாக பணியமர்த்தும் விகிதத்திலிருந்து 74.6 விழுக்காடு குறைவாகவே பணியமர்த்தியது. கடந்த 2015ஆம் நிதியாண்டின் முதல் 9 மாதத்தில் 17,000 பேரை பணியில் சேர்த்துக் கொண்ட இன்போசிஸ் நிறுவனம், 2016ஆம் ஆண்டில் 5,700 பேரை மட்டுமே சேர்த்துக் கொண்டது.

அதிகளவிலான பணியாளர்களை நீக்கும் உலகின் முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் இந்தப் புதிய போக்கு, ஏற்கெனவே எச்சரிக்கப் பட்டதுதான்!

இதுவரை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், அலுவலக நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்கான மென்பொருள்களை உருவாக்கும் (Software Development) பணிகளையே முதன்மையாகச் செய்துவந்தன. இதனை குறைந்த ஊதியத்தில் செய்து முடிக்கும் பணியாளர்கள், இந்தியா மற்றும் ஆப்ரிக்க நாடுகள் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் கிடைத்து வந்தனர்.

உருவாக்கப்பட்ட இந்த மென்பொருள்களைக் கொண்டு, தகவல்களை உள்ளீடு செய்யவும் பராமரிக் கவும் (Operations and Maintainence) செய்யும் கீழ்நிலைப் பணியாளர்களும் இதே நாடுகளில் கிடைத்ததால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முன்னணி முதலாளிய நாடுகளின் பணிகள், இந்த நாடுகளுக்கு திருப்பிவிடப் பட்டன. உலக அளவில் இதுபோன்ற வெளிப்பணி யேற்றப் பணிகளில் (Outsourcing Jobs) இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்களிப்பு சற்றொப்ப 60 விழுக்காடாகும். இதன் மூலம், சற்றொப்ப 42.5 இலட்சம் பேர் பணி வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இன்னொருபுறத்தில், இந்தப் பராமரிப்பு மற்றும் உள்ளீடு செய்யும் பணிகளை தானியங்கி மூலம் – விதிகளின் அடிப்படையிலும், தகவல்களின் அடிப் படையிலும் சூழலை உணர்ந்து கொண்டு தானே பணிகளைச் செய்து கொள்ளும் நுண்ணறிவுத்திறன் (Artificial Intelligence) கொண்ட அதி நவீன மென்பொருள் களை வடிவமைக்கும் பணி நடைபெற்று வந்தது. வங்கிகளில் பணியாளர்களைக் குறைக்க பணமெடுக்கும் இயந்திரங்கள் பயன்பட்டதைப் போல், ஒவ்வொரு துறைகளிலும் நடைபெற்று வரும் கணினி சார்ந்த நிர்வாகப் பணிகள் தற்போது இந்த தானியங்கி முறைக்கு மாறி வருகின்றன. இதன் காரணமாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றும் கோடிக்கணக் கானவர்கள் பணி இழக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவன முதலாளிகள் சங்கமான நாஸ்காம் (National Association of Software and Services Companies - NASSCOM), கடந்த 2015ஆம் ஆண்டே இது குறித்து எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டது. தானியங்கிமயத்தின் காரணமாக, இன்றைக்குத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியிலுள்ள 50 விழுக்காட்டினர் பணி இழக்கக் கூடும் என்று அது அறிவித்தது. அதாவது, சற்றொப்ப 26 இலட்சம் பேர் வேலை வாய்ப்புகள் இழப்பர் என்றது அவ்வமைப்பு!

கடந்த 2016 அக்டோபரில் உலக வங்கி வெளியிட்ட ஆய்வறிக்கை, இந்தியாவில் 69 விழுக்காடு வேலை களையும், சீனாவில் 77 விழுக்காடு வேலைகளையும் தானியங்கிமயம் குறைக்கும் என்று தெரிவித்தது. எத்தியோப்பியா போன்ற வறிய ஆப்ரிக்க நாடுகளில் இது 85 விழுக்காடாக இருக்கும் என்றும் அவ்வறிக்கை எச்சரிக்கிறது. இன்போசிஸ் நிறுவன முன்னாள் தலைமை அதிகாரி மோகன்தாஸ் பாய், அடுத்த ஒன்பது ஆண்டுகளில் சற்றொப்ப 20 கோடி இந்திய இளை ஞர்கள் இது போன்ற தானியங்கிமயத்தால் பணி இழப்பர் என்று தெரிவித்துள்ளார்.

இதை உறுதிப்படுத்துவதைப் போல, 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்தியாவில் வேலையின்மை 1.78 கோடியாக அதிகரிக்கும் என உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்ட ஆய்வறிக்கை (World Employment and Social Outlook Report) எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த தானியங்கிமயத்தால் கோடிக்கணக்கான வர்கள் பணியிழந்து வீதிக்கு வரப்போகும் சூழலில், இந்தத் தகவல் தொழில்நுட்பத்துறை நிறுவனங்களோ இன்னும் பல்லாயிரம் கோடிகள் இலாபம் ஈட்டப் போகின்றன. தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றலாம் என்ற நம்பிக்கையோடு ஏற்கெனவே பல இலட்சம் கணினிப் பொறியாளர்களை உருவாக் கியுள்ள தமிழ்நாடு, இதனால் மேலும் பாதிப்புகளை சந்திக்கவுள்ளது.

பல இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதால்தான் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சலுகை விலையில் நிலம், நீர், வரி விலக்கு போன்றவற்றை அளிப்பதாகக் கூறும் இந்திய – தமிழ்நாடு அரசுகள், கோடிக்கணக்கானவர்களின் பணிகள் பறிபோகும் இந்தச் சூழலில் அமைதியாக வேடிக்கைப் பார்க்கக் கூடாது. இன்னொருபுறத்தில், தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பணியாளர்கள், சங்கமாகத் திரண்டு தங்கள் உரிமைகளுக்குப் போராட வேண்டிய அவசிய – அவசர சூழலும் ஏற்பட்டுள்ளதை உணர வேண்டும். ●

வரலாறு அறிவோம்

கதிர்நிலவன்

சிலப்பதிகாரத்தை சிறப்பிக்கும் வகையில் "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எனும் மணியாரம்" என்று பாடியவர் தமிழ்க்கவி சுப்பிரமணிய பாரதியார்.

அதற்கு முன்னர் அவருக்கு சிலப்பதிகாரம் குறித்துத் தெளிவு பிறக்கவில்லை. 1912ஆம் ஆண்டு சிலப்பதி காரத்தில் கற்றுத் தெளிந்த தமிழறிஞர் ஒருவரைச் சந்தித்தார். "ஐயா, சிலப்பதிகாரத்தில் எனக்கு சில ஐயங்கள் ஏற்பட்டுள்ளபடியால் அதைத் தாங்கள் தான் போக்க வேண்டும்" என்றார்.

அந்தத் தமிழறிஞருக்கு வந்தவர் பாரதியார் என்பது தெரியாது. தமிழறிஞரோ தலைப்பாகையோடு இல்லம் வந்தவரை வரவேற்று இருக்கையில் அமரும்படி வேண்டினார். குருவிற்கு முன் சீடன் அமர்வது முறையல்ல என்று கூறிவிட்டுத் தனக்குச் சிலப்பதிகாரத்தில் ஏற்பட்ட ஐயங்களை எழுப்பினார் பாரதியார்.

எல்லாவற்றுக்கும் தெளிந்த பதில் கிடைத்ததை எண்ணி இன்புற்று மகிழ்ந்த பாரதியார் "பராசக்தி அருள் செய்வாள்" என்று கூறிவிட்டு விடை பெற்றார். பின்னர் தலைப்பாகையோடு வந்து போனவர் பாரதியார் என்பதைத் தன் இளவல் மூலம் அறிந்து கொண்டார் அந்தத் தமிழறிஞர். அவர் வேறு யாருமல்ல; அனைவராலும் பாராட்டப்பெற்ற சிலப்பதி காரத்திற்கு உரை எழுதிய நமு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தான்.

இவர் தஞ்சைக்கு அருகில் உள்ள நடுக்காவிரி ஊரில் 12.4.1884 அன்று வீ. முத்துச்சாமி நாட்டார் தைலம்மை இணையருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு சிவப்பிரகாசம் என்று பெயரிட்டனர். இளம்வயதில் தொடையின் மேற்புறத்தில் கட்டி வந்ததால் துன்பப்பட்டு வந்தார். இதைக் காணப் பொறாத பெற்றோர் வெங்கடேசப் பெருமாளிடம் முடி நேர்த்திக்கடன் செய்வதாக வேண்டிக் கொண்டனர். பின்னர் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் வேங்கடசாமி என்று பெயர் மாற்றப்பட்டது.



நான்காம் வகுப்பு வரை திண்ணைப் பள்ளியில் படித்து வந்த வேங்கடசாமி தன் தந்தையார் மூலம் பல தமிழ் நூல்களைக் கற்றுக் கொண்டார். ‘சாவித்திரி வெண்பா’ நூலாசிரியர் சாமிநாதன் முதலியார் வழிகாட்டுதலில், தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களில் புலமை பெற்று விளங்கினார்.

1905இல் வேங்கடசாமி அவர்கள் நான்காம் தமிழ்ச் சங்கம் என்று அழைக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்தார். அந்தத் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்க்கல்வியில் பண்டிதர் தேர்ச்சி பெற மூன்று அடுக்குகள் இருந்தன. அவை முறையே பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்பனவாகும். ஒவ்வொரு படிப்பும் இரண்டு ஆண்டுகள் வீதம் மொத்தம் ஆறு ஆண்டுகள் படிக்க வேண்டும்.

ஆனால் வேங்கடசாமி அவர்களோ கற்றல்திறன் மிகுதி காரணமாக முழுப்படிப்பையும் மூன்று ஆண்டுகளுக்குள் முடித் தார். பால பண்டிதர் தேர்வில் முதல் மாணவராகவும், பண்டிதர் தேர்வில் மாநிலத்தில் முதல் மாணவராகவும் தேர்ச்சி பெற்றார். இருபது வயதில் சேர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் தமிழ்ப் புலமையில் சிறப்புற்று விளங்கிய வேங்கடசாமியைத் தமிழ்ச்சங்க நிறுவனர் பாண்டித்துரையார் வியந்து பாராட்டியதோடு தங்கத் தோடா (தங்கக்காப்பு) அணி வித்து சிறப்பித்தார்.

# வளர்தமிழ் நூலாசிரியர்
# நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்

பிறந்த நாள் - 12.4.1884

தமிழ்ச்சங்கத் தேர்வில் முதலிடம் பிடித்த வேங்கடசாமிக்குப் பல்வேறு பள்ளிகளிலிருந்து தமிழாசிரியர் பணியாற்ற வருமாறு அழைப்புகள் வந்தன. 1908இல் திருச்சி பி.ஜி. கல்லூரியில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு 25 ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போது இலக்கிய ஆராய்ச்சிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். 1915இல் மு.இராகவையங்கார் எழுதிய "வேளிர் வரலாறு" நூலுக்கு மறுப்பாக அதே பெயரில் நூலெழுதி வெளியிட் டார். நக்கீரர் (1919), கபிலர் (1921), கள்ளர் சரித்திரம் (1923), கண்ணகியின் கற்பும் மாண்பும் (1924), சோழர் சரித்திரம் ஆகியவை அவரின் கைவண்ணத்தில் உருவான ஆராய்ச்சி நூல்களாகும். இவற்றுள் "கள்ளர் சரித்திரம்" நூலைப் படித்த உ.வே.சா. கலாசாலை மாணவர்களுக்குப் பாட நூலாக வைப்பதற்குத் தகுதியான நூல் இது வென்று பாராட்டினார்.



தமிழ் இலக்கியங்களின்பால் தமிழ் மக்கள் ஈடுபாடு கொள்வதற்கு உரையெழுதுவதே மிகச் சிறந்த வழியென்பதை கண்டுணர்ந்தார். 1925இல் இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்கு உரையெழுதி பேரும் புகழும் அடைந்தார். தமிழறிஞர்கள் பலர் இவரை நமு.வே. என்றும், நாட்டார் என்றும் அன்போடு அழைத்தனர்.

1933இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏழு ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். நாட்டார் எழுது வதோடு மட்டுமல்ல: பேச்சாற் றலிலும் தலை சிறந்து விளங்கி னார். இவரின் சொற் பொழிவைக் கேட்பதற்கு தமிழ் உணர் வாளர்கள் நீண்ட தொலைவுகளில் இருந்து கால்கடுக்க நடந்தே வந்து கேட்டு மகிழ்வார்கள். இவரின் நாவன்மையைப் போற்றும் வகையில் 1940இல் சென்னை மாநிலத் தமிழர் சங்கம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

நாட்டார் தாய் மொழிப்பற்றின் தேவை குறித்து எங்கும் எவ்விடத்திலும் பேசத் தயங்க மாட்டார். அவர் கூறுகிறார்:

"மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனமாயிருப் பது மொழி என்பதே. மொழியே மக்களை மாக்களினின்று வேறுபடுத்து வதாகும். இப்பொழுது உலக மக்களால் எண்ணற்ற மொழிகள் பேசப்படுகின்றன. எம்மொழி எவ்வினத்தவரால் வழிவழி யாகப் பேசப்படுகின்றதோ அம்மொழி அவ்வினத்தவருக்குத் தாய் மொழி என்று சொல்லப்படும். "காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற் குரியதே. தாய்மொழியிடத்துப் பற்றில்லாத வரும் மக்கள் எனத் தகுவரோ?"

அதுபோல் தமிழ்மொழியில் பிறமொழிச்சொற்கள் கலந்தெழுது வதை வன்மையாகக் கண்டித்தார். புதிய தமிழ்ச்சொற்கள் கண்டு பிடிக்கும் வரையிலும் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்ற போதிலும் தமிழ் ஒலி வடிவத்திற்கேற்பத் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்றார்.

கல்வியில் சிறந்த கம்பனும் இலக்குவன், வீடணன், தயரதன் என்றே தமிழ் ஒலிக்கேற்ற முறையில் அழைத்து வந்தார் என்றும், கிறித்துவ வேதத்தை மொழி பெயர்த்தோரும் கூட இயேசு, யோவான், யாக்கோபு என்றே தமிழைத் திரியாமல் அழைத்து வந்ததாகவும் எடுத்து இயம்பினார்.

பெயருக்குப் பின்னால் எழுதப்படும் சாதிப் பெயர்கள் இடைக் காலத்தில் வந்ததே தவிர, சங்க காலத்தில் வந்ததல்ல என்பதைத் தமது தமிழ் உரைகள் நூலில் தெளிவுபடுத்தினார். அது வருமாறு :

"இப்பொழுது வழங்குவது போல ஐயர், ஐயங்கார், நாயுடு, செட்டி, பிள்ளை, முதலியார் என்னும் பட்டப் பெயர்களாவது, கள்ளர்

வகுப்பினர் முதலானோர்பால் காணப்படும் அளவற்ற பட்டப் பெயர்களாவது சங்க நாளில் வழங்கவில்லை. அவையெல்லாம் இடைக் காலத்தில் தோன்றியவையே.

ஐயர் என்பது முனிவர் அல்லது பெரியாருக்கே சிறப்பாய் வழங்கியது. கண்ணப்பர், நந்தனார் முதலிய வேறுகுலத்துப் பெரியார்களையும் சிறப்புப்பற்றி ஐயர் என ஆன்றோர் வழங்கியிருக்கின்றனர்.

சிறப்புப் பெயர் வருங்காலும், சிறப்பினவாகிய பெயர்நிலைக் கிளவிக்கும் இயற்பெயர் கிளவி முற்படக்கிளவார் என்ற விதிப்படி, அமரமுனிவன், அகத்தியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன், சேரமான் சேரலாதன் என்றாற் போல இயற்பெயருக்கு முன் வருதலே மரபு. பிற்காலத்தில்தான் பெயர்கள் இம்முறை மாறி, வரலாயின. சிறப்புப் பெயரும் முன்பு யாவருக்கும் வழங்குவன அல்ல. எனவே பண்டை மக்கள் தம்மை வேறுபடுத்திக் காட்டப் பெரிதும் விரும்பவில்லை என்பது போதரும்"

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஓய்வுபெற்ற பிறகு தஞ்சை மண்ணில் தங்கி வாழ்ந்த நாட்டார் அவர்களை தமிழவேள் த.வே. உமா மகேசுவரனார் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் பணியாற்றும் படி கேட்டுக் கொண்டார். அதனை ஏற்றுக் கொண்டு ஊதியம் பெறாமலே, முதல்வராகித் தமிழுக்கு தொண்டாற்றினார். அவர் வாழ்வின் இறுதிக் காலத்திலும் கூட உரையெழுதுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. சிலப்பதிகார உரையும், மணிமேகலை உரையும் எழுதி வெளியிட்டதால் "உரைவேந்தர்" என்றப் பெயர் அவருக்கு வழங்கப்பட்டது.

நாட்டார் தமது அறுபதாம் அகவையில் மணிவிழா கொண்டாடத் திட்டமிட்டிருந்த நிலையில் 28.3.1944 இல் காலமானார். தமிழறிஞர் கா. நமச்சிவாயம் அவர்களும் மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில் தான் காலமானார் என்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

தஞ்சையிலோ, திருச்சியிலோ தமிழ்ப் பல்கலைக் கழகம் அமையப் பெறவேண்டும் என்பதே அவரின் நீண்ட நாள் கனவாகும். அவரின் கனவு 37ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியது. 1981இல் தஞ்சைப் பல்கலைக் கழகமும், 1992இல் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரியும் நிறுவப்பட்டது.

தற்போது இந்துத்துவ வரலாற்று ஆய்வாளர்கள் பலர் இன்றைக்கும் ஆரிய மொழியான சமசுகிருதத்திலிருந்து தான் தமிழ்மொழி தோன்றியதாக பொய்க் கதைகளைக் கூறி பொய்மை இந்தியாவைக் கட்டி எழுப்ப முயன்று வருகின்றனர். ஆனால் இது உண்மை யல்ல என்பதை அன்றைக்கே நாவலர் வெளிப்படுத்தினார்.

"பரத கண்டத்து வழங்கும் மொழிகளுக்குள்ளே தென்மொழி என்றும், வடமொழி என்றும் திசைப் பெயரெடுத்து எதிர் நின்று வழங்கப் பெறுவன தமிழும் ஆரியமுமே யன்றோ? தமிழின் தனித் தன்மையையோ, உயர்வையோ கூறப்புகின், அது மற்றொன்றை வெறுப்பதோ, இழிவுபடுத்துவதோ ஆகுமெனச் சிலர் கருதுகின்றனர். அத்தகைய மனப்பான்மையினர் இவ்வவையின் கண் இரார் என எண்ணுகிறேன்.

எல்லா மொழிக்கும் ஆரியமே தாயாகுமென்றும், அம்முறையே தமிழும் ஆரியத்தினின்றே தோன்றியதாகுமென்றும் கொள்ளும் ஆராய்ந்து துணியாத கொள்கையினையுடையார் சிலர் அந்நாளின் முன்பு தொட்டு இருந்து வருகின்றனர். மொழியாராய்ச்சியென்பது புதிய கலை முறைகளில் ஒன்றாகி உண்மையை விளக்கி வருகின்ற இந்நாளில் அக்கொள்கை அருகிவிட்டதென்பதில் ஐயமில்லை. எனினும், அக் கொள்கை அறவே ஒழியுமாறு தமிழின் சிறப்பியல்புகளை உள்ளவாறு எடுத்துக் காட்டித் தெருட்டுதல் நம்மனோர் கடன்" .

தமிழகத்தில் ஆரியத்தை கால்பதிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருப்பது தமிழ்மொழியின் தனித் தன்மை தான். ந.மு.வே. கூறியதைப்போல நம் மொழியின் சிறப்பினைக் கூறுவதையே ஒவ்வொரு தமிழரும் தமது வாழ்வின் கடனாகக் கொள்ள வேண்டும். இது ஒன்றே இந்நாளில் வேங்கடசாமி நாட்டாருக்கு நாம் செலுத்தும் மரியாதையாகும். ●

## இசுலாமியத் தீவிரவாதத்திற்குப் பலியான தோழர் பாரூக்



கோவை – உக்கடம் பகுதியைச் சேர்ந்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் இளம் தோழர் பாரூக் அவர்கள், கடந்த 16.03.2017 அன்றிரவு கோவையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவருக்கு அகவை 31.

தமிழர்களின் உரிமைப் போராட்டக்களங்களில் பங்கேற்று வந்த தி.வி.க. தோழர் பாரூக் அவர்கள், கடவுள் மறுப்புக் கருத்தைத் தீவிரமாகப் பரப்புரை செய்து வந்தவர் ஆவார். பாரூக்கின் கடவுள் மறுப்புக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாத இசுலாமியர் சிலரே, அவரைக் கொலை செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

தமிழ்த்தேசியம் – கடவுள் மறுப்பாளரையும், கடவுள் பற்றாளர்களையும் ஏற்கிறது. கடவுள் உண்டென பரப்புரை செய்ய உரிமை உள்ளதைப் போல், கடவுள் மறுப்பைப் பரப்புரை செய்யவும் அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், ஒருவரை ஒருவர் இழிவுபடுத்திக் கொள்ளாமல், கருத்துத் தளத்தில் இந்த வாதங்கள் இருக்க வேண்டும்.

கடவுள் மறுப்புக் கொள்கையைப் பரப்பியதற்காக தோழர் பாரூக் அவர்கள் படுகொலை செய்யப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது. அவரது படுகொலையை தமிழ்த்தேசியப் பேரியக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இளம்தோழர் பாரூக் அவர்களுக்கு தமிழ்த்தேசியப் பேரியக்கம் வீரவணக்கத்தையும், அவரது மறைவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது! ●

# அணை உடையட்டும்! அறம் நிலைக்கட்டும்!

பாவலர் மு.த.கவித்துவன்

இடி இடி இடி இடி!
இடி இடி இடி இடி!

மேகக் கூட்டமே!
இடி இடி இடி இடி!

பெருமழை அறிகுறி
பேரோசை முழக்கி
பேரிடியாய் நீ
இடி இடி இடி இடி!
வெட்டு வெட்டு!
மின்னலே வெட்டு!

மேகப் பொதிக்குள்
ஒளிக்கோடாகி
கீற்றெனக் கிழித்து

வெட்டு! வெட்டு!
மின்னலே வெட்டு!

கொட்டு கொட்டு!
மழையே கொட்டு!
பெருமழையாய்ப் பெரும்
பேய்மழையாய்..!

காரிருள் போர்த்தி
கருங்கும் இருட்டில்
அடாத செயலினை
அறுத்தே எறிந்திட..

விடாது மழையென
வெள்ளப் பெருக்கை
நிகழ்த்து..! நிகழ்த்து..!

நெடுமழை நீண்டு
கடுமழை யாகி
கொடுமுகம் காட்டிப்
பொழிக.. பொழிக.!

பூமழை யின்றி
புண்மழை பொழிக!

வான்மழை யே நீ
வன்மழை யாகுக!

பொழிக.. பொழிக.!
புலிப் புனல் பொழிக!

தடைகள் நொறுக்கி
படையாய் முறுக்கி
விடையே இதுவென
விளக்கிடப் பொழிக!

வா வா வா வா!
வா வா வா வா!

இதுவரை காணா
வெடிமழை யாகி
தடிமுகமேந்தி
தண்மழை யே வா!

அணை உடையட்டும்!
அறம் நிலைக்கட்டும்!

மாந்தக் கேடுகள்
வெள்ளக்காட்டில்
மொத்தமாய் அடித்துப்
போய் ஒழியட்டும்..!

தரிகிடத் தரிகிடத்
தரிகிடத் தத்தோம்!

தமிழ்நா டுன்னால்
செழித்தோங் கட்டும்!




ஆவடியில் இந்திய அரசின் பாதுகாப்புத் துறைத் தொழிற்சாலையான படை உடைத் தொழிற்சாலையில், தொடர்ந்து பல்வேறு பணிகளில் தமிழர் அல்லாத பிற இனத்தவர்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். அதனைக் கண்டித்தும், தமிழர்களைப் பணியமர்த்தக் கோரியும் பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து நடை பெற்று வந்தன.

அப்போராட்டங்களில் பங்கேற்று ஆதரவு தந்த தொழிலாளர் திரு. துளசிராம் கடந்த சூன் மாதம் பணி யிடை நீக்கம் செய்யப்பட்டார். கடந்த பிப்ரவரி மாத இறுதியில் அவரது பணியிடை நீக்கத்தை திரும்பப் பெற்ற நிர்வாகம், அவரை உத்திரப்பிரதேச மாநில சாஜகான்பூருக்கு உள்நோக்கத்தோடு பணி மாற்றம் செய்தது.

தொழிற்சாலை நிர்வாகத்தின் இப்போக்கைக் கண்டித்தும், தமிழர்களுக்கே தொழிற்சாலையில் பணி வாய்ப்பு அளிக்க வேண்டுமென வலியுறுத்தியும், கடந்த 24.02.2017 அன்று, ஆவடியில் "தமிழர் தேசியத் தொழிலாளர் முன்னணி" சார்பில், கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

ஆவடி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்திற்கு, தமிழர் விடுதலைக் கழகத் தலைவர் திரு. சௌ. சுந்திரமூர்த்தி தலைமை தாங்கி னார். தோழர்கள் சிவ. காளிதாசன், பெ. நாகராசன், மணிசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி நிறுவனத் தலைவர் திரு. குடந்தை அரசன், எஸ்.டி.பி.ஐ. கட்சி பொறுப்பாளர் திரு. ஏ.கே. கரீம், தமிழ்த்தேச மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் தமிழ்நேயன், மனித நேய மக்கள் கட்சிப் பொறுப்பாளர் திரு. எஸ்.ஏ. சேக் முகமது அலி, தமிழர் எழுச்சி இயக்கத் தலைவர் திரு. பா. வேலுமணி உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்று உரையாற்றினர். தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட் ராமன் பங்கேற்றுக் கண்டன உரையாற்றினார். அவர் பேசியதாவது:

"ஆவடி பாதுகாப்புத்துறைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வரும் நண்பர் துளசிராம் அவர்கள் நிர்வா கத்தால் பழிவாங்கப்பட்டிருக்கிறார். அவர் மீதான பழிவாங்கலுக்கு எதிராக அவர் நீதிமன்றத்தில் வழக்குத்

# "இடதுசாரிகள் இசங்களில் கட்டுண்டு நிற்காமல் மண்ணின் மக்கள் உரிமைக்காக நிற்க வேண்டும்!"

## தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி.வெ. பேச்சு

தொடுத்துள்ளார். அந்த வழக்கில் நிர்வாகத் தின் பழி வாங்கும் ஆணை தோல்வியுறும் என்று நிர்வாகத்திற் கும் தெரியும், அவர்களது தொழிற்சங்கத் திற்கும் தெரியும். ஆனாலும், துளசிராம் அலையட்டும் என்று அவர்கள் காத்திருக்கிறார்கள்.

நண்பர் துளசிராம் அவர்களின் பணி மாறுதல் கடிதத்தில், "பொது நலனுக்காக உங்களை வேறிடத் திற்கு மாற்றுகிறோம்" என்று எழுதிக் கொடுத்துள் ளார்கள். இந்த வாசகமே இந்த வழக்கு வெல்வதற்குப் போதுமானது! "பொது நலன்" என்பதற்கான வரைய றையை நீதிமன்றத்தில் அவர்களால் மெய்ப்பிக்க முடியாது. எனவே, நண்பர் துளசிராம் இவ்வழக்கில் நிச்சயம் வெல்வார். வென்று, இதே தொழிலகத்தில் அவர் பணிபுரிவார். இது உறுதி!

இருப்பினும் இந்த அலைக்கழிப்பு தேவைதானா என்ற நீதியைக் கேட்கவே நாம் இங்கு கூடியுள்ளோம்! இந்த அநீதியை நம் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றே நாம் கூடியுள்ளோம்!

கிட்டத்தட்ட தமிழ் இனத்தின் பகை நிறுவனங்கள் போலவே, தமிழ்நாட்டிலுள்ள இந்தியஅரசு நிறுவ னங்கள் செயல்படுகின்றன. அயல் இனத்தாரை தொடர்ந்து இந்நிறுவனங்களில் குவிக்கிறார்கள். இந் நிறுவனங்களில் மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலும் அயல் இனத்தார் குவிந்து கொண்டே உள்ளனர். இந்த உண்மை எளிய மக்களுக்குக்கூட புரிகிறது. ஆனால், இடதுசாரிகள்தான் இதைப் புரிந்து கொள்ள மறுக்கி றார்கள்.

ஜார்க்கண்டிலிருந்து பீகாரிலிருந்து வருபவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள், வறுமையில் வாடி வருகிறார்கள். எனவே, அவ்வாறு தமிழ்நாட்டுக்கு பிழைப்புத் தேடி வருபவர்கள் இங்கேயே இருக்கட்டும் என்கிறார்கள்.

நாங்கள் தொடர்ந்து கூறி வருகிறோம். எந்த இசமும் -எந்த தத்துவமும் வழிகாட்டவும் செய்யும், வழிமறிக் கவும் செய்யும்! எந்தவொரு இசவாதியும், மண்ணின் மக்களுடைய வாழ்விலிருந்து -பிரச்சினைகளிலிருந்து விடை காண வேண்டும். ஆனால், தத்துவத்தின் வழியே கோட்பாடுகளின் வழியே ஒரு இனத்தைப் பார்க்கக் கூடாது!

பிற மாநிலத்தவர்களைவிட நம் தொழிலாளிகள் சட்டம் பேசுவார்கள், சட்டம் பேசாமல் குறைந்த கூலிக்கு வெளியாரே வேலை செய்வார்கள் என்றெல் லாம் இதற்கு ஞாயம் சொல்கிறார்கள்.

ஆனால், இதே இடதுசாரிகள்தான் பாலத்தீனத்தில் - தமிழீழத்தில், பாட்டாளிகளாக உள்ள அயல் இனத்தவர்கள் குடியேறுவதை எதிர்க்கிறார்கள்.

முதன் முதலில் சிங்கள அதிபர் பண்டாரநாயகே ஆட்சியில், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குகிறோம் என்று அறிவித்த போது, அதனை முற்போக்குத் திட்டம் என்றும் புரட்சிகரத் திட்டம் என்றும் அனைவரும் வரவேற்றனர். ஆனால், அவர் என்ன செய்தார்? நிலமற்ற சிங்களர்களுக்கு தமிழீழ மண்ணின் நிலத்தைக் கொடுத்தார். பலனடைந்தது சிங்கள உழைக்கும் மக்கள் தான்! ஆனால், அதனால் பாதிக்கப்பட்டது தமிழீழத் தாயக மண்!

தமிழீழ மண்ணில் நடப்பதைப் போல், இப்படி பல நாடுகளில் ஆக்கிரமிப்பு நடந்து கொண்டுள்ளது. துப்பாக்கி ஏந்தினால் மட்டுமே அது நம்மவர்களுக்குப் புரிகிறது. ஆனால், அதே விடயம் துப்பாக்கியில்லாமல் தமிழ்நாட்டில் நடக்கிறது. அதை கண்டு கொள்ள மறுக்கிறார்கள்.

மார்வாடிகள், மலையாளிகள் வணிகம் செய்ய வந்து, தமிழ்நாட்டில் நிலத்தை வாங்கிக் குவிக்கிறார்கள். தொழில் வணிகங்களில் ஆதிக்கம் புரிகின்றனர். கட்டடங்களை வாங்குகிறார்கள். தனிப்பட்ட முறையில் அது ஒரு தமிழனுக்கு நிலம் இழப்பு. ஆனால், ஒட்டுமொத்தத் தமிழ் இனத்திற்கு அது தாயக இழப்பு!

இங்கே தொடர்ந்து அயலார் குவிக்கப்படுவதால், தமிழ்நாட்டின் இனச்சமநிலை விகிதம் குலைக்கப் படுகிறது. 1956ஆம் ஆண்டு நவம்பரில், தமிழ்நாடு மொழிவழி மாநிலமாக உருவாக்கப்பட்டது. அது ஏதோ நிர்வாக வசதிக்காக செய்யப்பட்ட ஏற்பாடு அல்ல! அந்தந்த மொழி பேசும் வரலாற்றுத் தாயகப் பகுதி உறுதிப்படுத்தும் வகையிலேயே அது செய்யப் பட்டது.

தற்போது, தமிழ்நாட்டில் குவிந்துள்ள அயல் இனத்தாருக்கு வாக்காளர் அட்டை - குடும்ப அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் தமிழ்நாட்டிலேயே நிலை பெற்றுவிட்டார்கள் என்றால், இந்த மண்ணிற்கான உரிமை படைத்தவர்களாக அவர்கள் மாறிப் போவார்கள். வாக்காளர் என்ற முறையில் அவர்கள் இந்த மண்ணின் அரசியலில் தலையிடச் செய்வார்கள். நம் கண்முன்னே உள்ள எடுத்துக்காட்டு, புதுச்சேரி! அங்கு அயலார் எண்ணிக்கை அதிகளவில் இருப்பதால் தான், தொடர்ந்து அங்கு அனைத்திந்தியக் கட்சிகள் ஆட்சிக்கு வருகின்றன. ஆதிக்கம் செலுத்து கின்றன. எனவே, இந்த உண்மைகளை நாம் புரிந்த கொள்ள வேண்டும்.

இந்த மண்ணை இழந்து விட்டு, நாம் எங்கே செல்லப் போகிறோம்? கம்யூனிசமோ சோசலிசமோ வேண்டும் என்றால்கூட, அதற்கொரு நிலம் வேண் டாமா? மொழி வேண்டாமா? பலமொழி பேசும் மக்கள் வாழ்ந்த ஆஸ்திரியாவை காரல் மார்க்சு, "சந்தைக் கூச்சல்" என்றார். ஒவ்வொரு மொழி பேசும் மக்களுக்கும் தனி நாடு வேண்டும் என்றார். எனவே, இடதுசாரிகள் சிந்திக்க வேண்டும். மண்ணின் மக்கள் உரிமைக்காக நிற்க வேண்டும்".

இவ்வாறு தோழர் கி. வெங்கட்ராமன் பேசினார்.

கூட்டத்தில், திரளான தமிழின உணர்வாளர்களும் பொது மக்களும் பங்கேற்றனர். பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் பழ.நல். ஆறுமுகம், தமிழக இளைஞர் முன்னணி சென்னை தலைவர் தோழர் வெற்றித்தமிழன் உள்ளிட்ட பேரியக்கத் தோழர்கள் பங்கேற்றனர். •

## ஊர் உலகம்

தென்கொரியாவில் ஒருவகை சர்வாதிகார ஆட்சியே தொடர்ந்து வந்தது. அந்நாட்டில் சனநாயகத் தேர்தல் வழியாகப் பதவிக்கு வந்த முதல் குடியரசுத் தலைவர் பார்க் கியுன் ஹை என்ற பெண் ஆவார். இவரை அந்நாட்டு அரசமைப்புச் சட்ட நீதிமன்றம் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக 10.3.2017 அன்று பதவி நீக்கம் செய்து தீர்ப்பளித்தது.

கடந்த டிசம்பர் 9ஆம் நாள் தென்கொரிய நாடாளு மன்றம், குடியரசுத் தலைவர் பார்க்குக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனாலும் பார்க் பதவி விலக மறுத்தார். இப்போது தென்கொரியத் தலைமை நீதிமன்றத்தின் எட்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு அவரைப் பதவி நீக்கியுள்ளது. அடுத்த 60 நாட்களுக்குள் அங்கு தேர்தல் நடத்தி, புதிய குடியரசுத் தலைவரைத் தேர்வு செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அதுவரை அந்நாட்டின் தலைமை அமைச்சர் ஹுவாங் கியோன் குடியரசுத் தலைவர் அதிகாரத்தைச் செயல்படுத்துவார்.

சனநாயகப்படி தேர்வு செய்யப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் அதிலும் பெண் பார்க் அவர்களுக்கு இந்த கதி ஏன் ஏற்பட்டது? குடியரசுத் தலைவர் பார்க்கின் நெருங்கிய தோழி, அதாவது தமிழ்நாட்டு அரசியல் பாணியில் “உடன் பிறவா சகோதரி” சோய் சூன் சில்!

பார்க் குடியரசுத் தலைவர் என்றாலும் சோய் நிழல் குடியரசுத் தலைவராகச் செயல்பட்டார். அரசு இரகசியங்கள் அனைத்திலும் தலையிடுவார். தமிழ் நாட்டைப் போலவே தென்கொரியாவில் அதிபரின் தோழிக்கு அதிகாரிகள் பணிந்தும் துணிந்தும் கையாள் வேலை செய்தார்கள்.

தோழி சோய் மிகப்பெரிய ஊழல் பெருச்சாளி! தோழிகள் இருவரும் சேர்ந்து கொள்ளையோ கொள்ளை ஆட்சி நடத்தினர்; கும்மாளம் போட்டனர். கடைசியில் மாட்டிக் கொண்டனர். இப்பொழுது பார்க்கின் பதவி பறிக்கப்பட்டுள்ளது. பார்க்கும் சோயும் சிறையிலும் தோழிகளாகவே இருக்க வாய்ப்புள்ளது.

தென்கொரியாவிலும் செயலலிதா - சசிகலாவா? தென்கொரிய நாடாளுமன்றம் அவர்களைத் தண்டித்துள்ளது. ஆனால் தமிழ்நாடு சட்டமன்றம் அவர்களுக்கு பாதபூசை அல்லவா செய்து வருகிறது!







அந்த ஆணையை கேரள அரசு மதிக்கவே இல்லை! அந்த ஆணை கிடைத்த பிறகும் கடந்த 10 ஆண்டு களாக தமிழ்நாடு அரசு அசைவற்று இருக் கிறது. இதனால், கேரள அரசு மேலும் துணிச்சல் பெற்று, அடுத்தகட்ட அடாவடியில் இறங்கிவிட்டது.



சிவகரி ஜமீனுக்கும் திருவிதாங்கூர் சமஸ்தானத் திற்கும் 1733இல் செண்பகவல்லி அணை தொடர்பாக எந்த ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என்றும், செண்பகவல்லி தடுப்பணை என்று ஒன்று இருந்ததே இல்லை என்றும் அடாவடியாகப் பொய் கூறுகிறது கேரள அரசு!

தமிழ்நாடு கேரள எல்லை ஒழுங்கமைக்கப்படா ததன் விளைவாகவே, இது போன்ற சிக்கல்கள் புதிது புதிதாகத் தோன்றுகின்றன. எனவே, தமிழ்நாடு முதல மைச்சர் கேரள அரசோடு பேசி, செண்பகவல்லி தடுப் பணையை உடனடியாக சீர் செய்வதற்கும், தமிழ்நாடு - கேரள எல்லைப் பகுதியை ஒழுங்கமைப்பதற்கும் நிர்வாக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். நெல்லை மாவட்ட உழவர்கள், இப்பகுதி பொது மக்கள், படித்த இளையோர் யாருக்காகவும் காத்தி ராமல், இது நமது சிக்கல் நாம் தான் மீட்க வேண்டும் என்ற உரிமை உணர்ச்சியோடு தொடர் இயக்கங்களில் பங்கேற்க வேண்டும்! உறுதியாக நம்புங்கள்! நாம் நம்முடைய ஒற்றுமை யின் மூலம் நமது நீதியை வெல்வோம்! செண்பகவல்லி அணையை மீட்போம்!

***கரிவலம்வந்தநல்லூரில் 19.03.2017 அன்று, "செண்பகவல்லி அணை உரிமை மீட்புக் குழு" நடத்திய பொதுக்கூட்டத்தில், தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன் ஆற்றிய உரையின் சுருக்கம்.***

# கரிவலம் வந்தநல்லூரில் பொதுக்கூட்டம்

சென்னை உயர் நீதிமன்ற ஆணைப்படி செண்பக வல்லி கால்வாய் தடுப்பணையை கேரள அரசு சீர் செய்திட வலியுறுத்தி, செண்பகவல்லி உரிமை மீட்புக் குழு சார்பில் 19.03.2017 அன்று கரிவலம்வந்தநல்லூரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கரிவலம்வந்த நல்லூர் வடக்கு இரத வீதித்திடலில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, செண்பகவல்லி உரிமை மீட்புக் குழு – கரிவலம் ஒருங்கிணைப்பாளர் திரு. ஞானராசு தலைமை தாங்கினார். செண்பகவல்லி உரிமை மீட்புக் குழு பனையூர் – இடையன்குளம் வட்டாரப் பொறுப்பாளர் திரு. செயக்குமார், திரு. அ. கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செண்பகவல்லி உரிமை மீட்புக் குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. க. பாண்டியன், செண்பகவல்லி உரிமை மீட்புக் குழு தென்மலை வட்டாரப் பொறுப்பாளர்கள் ஆசிரியர் பாப்புராஜ், திரு. காளிமுத்து (தலைவர்), திரு. வீருத்தேவர் (செயலாளர்), சிவகிரி கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. ஏ.எம். பழனிச்சாமி, சிவகரி விவசாயிகள் சங்கப் பொருளாளர் திரு. குருசாமி, தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் இரெ. இராசு, தமிழக உழவர் முன்னணி துணைத் தலைவர் திரு. மு. தமிழ்மணி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் கதிர்நிலவன், தோழர் பாண்டியராசன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளரும், தமிழக உழவர் முன்னணி தலைமை ஆலோசகருமான தோழர் கி.வெங்கட்ராமன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் கரிகாலன், சிவா, மகளிர் ஆயம் துரைச்சி, உள் எிட்டோரும், அப்பகுதி உழவர்களும் பொது மக்களும் திரளாகப் பங்கேற்றனர்.

Registered with registrar of news papers for RNI No. TN TAM / 2009 / 28475
Regd. No TN / CC / (S) DN / 478 / 16 -18 WPP License No. TN / PMG (CCR) / WPP - 239 / 16 -18
Date of Publication 1st & 16 th of every month

